பக்கங்கள்:- பத்து
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா. 6.00

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில்
ரா
ம்
கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 13 செவ்வாய்க்கிழமை (27.05.2003) தொலைபேசி ~ 2223378 ஒலி 159

## அரசியல் யாப்புக்கு உட்பட்டதாக
# இடைக்கால நிர்வாகத்தை
# வழங்க அரசு சம்மதம்!

## பிரதமரின் கடிதத்துடன் எரிக்சோல் இன்று வன்னி விரைவு



(நமது நிருபர்)

**இலங்கையின் அரசியல் யாப்புக்கு அமைவான வகையில் இடைக் கால நிர்வாக சபை ஒன்றினை அமைப்பதற்கு அரசு தயாராக இருப்ப தாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைத் துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை மேற் கொள்வதற்கும்,உலக நாடுகள் வழங்கும் நிதியினைப் பயன்படுத்து வதற்கும்.அதிகாரம் உள்ள இடைக் கால நிர்வாக சபை ஒன்றினை ஏற் படுத்திததந்தால் மட்டுமே யப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ள முடியு மென விடுதலைப் புலிகள் உறுதி யாகத் தெரிவித்துள்ளநிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் மூலம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வின் பதில் கடிதத்துடன் இன்று வன்னி செல்லும் எரிக்சோல ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் மற்றும் விடு தலைப் புலிகளின் முக்கியஸ்தர் களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

பன்னாட்டு நிதிநிறுவனங்கள்



இலங்கைக்கு வழங்கும் நிதியுதவி களை கட்டுக்கோப்பான முறையில்
(10ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் இருந்த சிப்பாய் தப்பிச் சென்றார்

(கொழும்பு)

தென்மராட்சியில் கடந்த வாரம் முதல் காணாமல் போன இராணுவச் சிப்பாய் ஒருவர் ஏ-9 வீதியூடாக தனது சொந்த ஊரான குளியாப் பிட்டிக்கு தப்பிச் சென்றுள்ளார்.

ஜி.எம்.கே.ரட்நாயக்கா என்ற சிப்பாயே ஏ-9 வீதியூடாக தென் பகுதிகுத் தப்பிச் சென்றவர் ஆவார்.

இவர் தனது துப்பாக்கியை படை முகாமில் மறைத்து வைத்து விட்டு முகாமில் இருந்து வெளியேறி பஸ் மூலம் ஏ-9 வீதியூடாக தென்பகுதிக் குத் தப்பிச் சென்றுள்ளார்.

பிரஸ்தாப இராணுவச் சிப்பாயை கைது செய்து,மீண்டும் இராணுவத் தில் இணைத்துக் கொள்வதற்கு படைத்தரப்பினர் முயன்று வருவதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரி விக்கின்றன. (த)

## ஆஸி.வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி,பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் நேற்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவையும்,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று மாலை இடம் பெற்ற சந்திப்பின் போது அரசுக்கும் விடு தலைப் புலிகளுக்குமிடையே நடை பெற்ற சமாதான முயற்சிகள் குறித் தும் அடுத்தகட்ட சமாதான நடவ டிக்கைகள் தொடர்பாகவும் அவுஸ் ரேலிய வெளிவிவகார அமைச்ச ருக்கு பிரதமர் விளக்கிக் கூறியுள் ளார்.இதனைத் தொடர்ந்து ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்காவை யும் அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் சந்தித்து இலங்கையில் நடை பெற்று வரும் சமாதான முயற் சிகள் தொடர்பாகக் கலந்துரையாடி யுள்ளார். (வ)

## இடைக்கால சபைக்கு சிஹல உறுமய எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக் கிழக் குப் பகுதிகளில் இடைக்கால நிர் வாக அமைப்பொன்றை அரசு ஏற்படுத்துவதை சிஹல உறுமய வன்மையாக எதிர்க்கும் என்று அக் கட்சியின தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

தமிழழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்ததினாலேயே நான் அக் கட்சியில் இருந்து வெளியே றினேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது தொடர்பாக கருத்து வெளியிட்ட திலக்கருணாரட்ணா மேலும் தெரிவிக்கையில்;

வடக்குக்கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக சபையை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங் கம் வழங்குமேயானால் அது தனித்
(10ம் பக்கம் பார்க்க)

## அரசியல் யாப்புக்கு அமைவாக பிரபாகரன் ஜனாதிபதியாக வரட்டும்
## ஜே.வி. பி. அதனை வரவேற்கும்

(கொழும்பு)

அரசியல் அமைப்புக்கு முர ணான வகையில் புலிகள் இடைக் கால நிர்வாக சபையை கோரு வார்களானால் அதனை ஜே.வி.பி எதிர்க்கும்.அதேவேளை அரசியல் அமைப்பிற்கு முரணற்ற வகையில் புலிகள் இயக்கத்தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் இலங்கை ஜனாதிபதியானால் கூட அதற்கு ஜே.வி.பி முழுமையான ஆதரவு வழங்குமென்று ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதியாக வரும் ஆசை பிரபாகரனுக்கிருந் தால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்து இந் நாட்டை அவர் ஆளட்டும். அதற்கு ஜே.வி.பி. தனது முழு ஆதர வையும் வழங்கும்.இல்லாவிடின் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநா யக வழியில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் ஆதரவுடன் வடக்கு கிழககில் நிர்வாக உரிமை யை புலிகள் கோரினாலும் அதற் கும் ஆதரவு வழங்க நாம் தயார்.

ஆனால் அரசியல் அமைப்பிற்கு முரணாக உத்தியோகப்பற்றற்ற தமிழீழத்தை அமைத்துக்கொள்ள அரசாங்கத்திடம் இடைக்கால நிர்வாக சபையை புலிகள் கோரி யிருப்பது கண்டிக்கத்தக்கது. அரசி யலமைப்பிற்கு முரணானது இதனை ஜே.வி.பி.வன்மையாக எதிர்க்கும் என்றும் ரில்வின் சில்வா தெரிவித் தார்.

நேற்றுக் கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ந)

## இடைக்கால நிர்வாக சபை புதியதோர் விடயமல்ல
## இரா.சம்பந்தன் எம்.பி.பேட்டி

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் என்பது ஓர் புதிய விடயம் அல்ல.1987-ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந் தத்தின் மூலம் இடைக்கால நிர்வா கம் தொடர்பில் விடுதலைப் புலிக ளுக்கு போதிய அளவு பெரும்பான்மை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலவி வந்தமை நாட்டில் அனை வருக்குமே தெரிந்த விடயம்.

இவ்வாறு திருமலை மாவட்ட எம்.பியும் தமிழர் விடுதலைக் கூட் டணியின் செயலாளர் நாயகமுமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகத்தின் அவ சியத்தை வலியுறுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள் ளார்.இக் கடிதம் குறித்து லண்டன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்குக் கிழக்கில் ஓர் உறுதியான செயற்பாட்டை முன்னெடுக்க இடைக்கால நிர்வாகம் அமைக்கப் பட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தியே பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன்.

இவ் இடைக்கால நிர்வாகம் என்ற விடயம் புதியதான ஓர் விடயம் அல்ல. ஏற்கனவே இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில் ஏற்படுத்தப்பட் டதுதான்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதென்ற விட யத்தை இப்போது பேசமுடியாது. ஏனெனில் ஆயுதம் ஏந்த வேண்டிய தேவை ஏற்பட்டதே நாட்டில் சமத் துவம் இல்லாததனால்தான்.

இவ்விடயம் குறித்து இன்னமும்
(10ம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

### நமது நிழல் நமக்கு உதவுமா?

கொஞ்சம் வசதியான ஆள் ஒருவன். அவனுக்கு தாராள மனது. மற்றவர்களுக்கு அவ்வப்போது தன்னால்முடிந்த உதவி ஏதாவது செய்வான். ஆனால் அவனுடைய மனைவிக்கு அதற்கு நேர்மாறான குணம்! மகாகருமி. அது மட்டுமில்லை தன்னுடைய கணவனையும ஏழைகளுக்கு உதவ அனுமதிப்பதில்லை. அந்த ஆள் மற்றவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று நினைத்தால்க் கூட, தன்னுடைய மனைவிக்குத் தெரியாமல் செய்தால்தான் உண்டு. என்ன பண்ணுவது? இப்படி ஒரு கணவன் மனைவி.

ஒரு சமயம் அந்த அம்மா பிறந்த வீட்டுக்கு போக வேண்டியிருந்தது. நடந்து போகலாம் என்று சொல்லி விட்டார் அந்தம்மா. அது கடுமையான கோடைகாலம். சரியான வெய்யில். அந்த உச்சி வெய்யிலில் இருவரும் நடந்தே புறப்பட்டார்கள். அந்த அம்மா, காலில் செருப்புக்கூட மாட்டிக்கொள்ளவில்லை. செருப்பும் போட்டுக்கொண்டால் அது தேய்ந்து போய்விடும் அல்லவா? அதனால், வெறுங்காலோடு நடக்க ஆரம்பித்து விட்டார். பக்கத்தில் நிழல் தரக்கூடிய மரம் எதுவும் இல்லை. காலில் சூடு தாங்கவில்லை! கடுமையான வெப்பம்! "மணல் சுடுகிறதே என்ன பண்ணுவது என்றார் அந்த அம்மா. மனைவி தவிப்பதை பார்த்தான் கணவன். ஏன் இப்படித் தவிக்கிறாய் உனக்குத் தான் உடம்பு மிகவும் பெரியதாயிற்றே! உன் உடம்பினுடைய நிழல் பூமியில் விழும் அல்லவா? அந்த நிழலில் கொஞ்ச நேரம் நின்று உன்னுடைய கால் சூட்டைத் தவிர்கலாமே!" என்று யோசனை சொன்னான். அந்த அம்மாவுக்கு கோபம் வந்துவிட்டது. "என்ன உளறுகிறீர்கள்? என்னுடைய நிழலின் மேல் நான் எப்படி நிற்கமுடியும்?" என்றார்.

இப்பொழுது கணவன் "கொஞ்சம் சிந்தித்துப்பார். உன்னுடைய நிழலே உனக்கு உதவ முடியவில்லை. நீ பெட்டியில் பூட்டி வைத்திருக்கிற பணமா உனக்குப் பிற்காலத்தில் உதவப் போகிறது?" என்று சொன்னானாம். அந்த அம்மாவுக்கு புத்தியில் ஒரு தெளிவு உண்டாயிற்றாம். மகான்களுக்கு மரத்தின் நிழலில் ஞானம் வருகின்றது. இந்த அம்மாவுக்கு உச்சிவெயிலில் ஞானம் வந்திருக்கிறது. வாரியார் சுவாமிகளிடம் கேட்டகதை இது. இதைக் கேட்டதும் நமக்கு இன்னொரு கதை ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு பெரிய செல்வந்தன். நிறையச்சொத்து. அவன் பயங்கர கருமி. பணம் சேர்க்கத்தெரியுமே தவிர செலவுசெய்யத் தெரியாது. அவனுக்கு மூன்று பிள்ளைகள். அந்த மூன்று பேரும் தன்னைப்போலவே, கருமியாக இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். அவனுக்கு கடைசிக்காலம் நெருங்கிவிட்டது. சாகக்கிடக்கிறான். மூத்தபிள்ளையைக் கூப்பிட்டான். "நான் செத்துப்போனால் என்னை நீ எப்படி அடக்கம் பண்ணுவாய்?" என்று கேட்டான்.

"உனக்குச் சந்தனப் பலகையால் ஒரு பெட்டி செய்வேன். அதில் உன்னைவைத்து, பட்டுத்துணியால் மூடுவேன். கௌரவமாகக் கொண்டுபோய் அடக்கம்பண்ணுவேன்" என்றான் அவன். அப்பன் அவனைபளார் என்று அறைந்துவிட்டான். "என்னுடைய பிள்ளையடா நீ? சந்தன மரமும் பட்டுத்துணியும் எவ்வளவு செலவாகும்? ஊதாரியாகப் போய்விடுவாய் போல இருக்கிறதே!" என்றான்.

இரண்டாவது பிள்ளையைக் கூப்பிட்டு அதேகேள்வியைக் கேட்டான். அண்ணன் அறைவாங்கியதை பார்த்தவன் அல்லவா? அதனால் யாக்கிரதையாக பதில் சொன்னான். "நான் உனக்கு கள்ளிப் பலகையால் பெட்டிசெய்வேன் துணி எதுவும் போர்க்கமாட்டேன். கொண்டுபோய் அடக்கம் பண்ணி விடுவேன்" என்றான். அவனையும் பளார் என்று அறைந்து விட்டான். கள்ளிப் பலகை மட்டும் என்ன சும்மாவா கிடைக்கும். காசு கொடுத்தால் தானே கிடைக்கும்" என்றான்.

கடைசியாக மூன்றாவது மகனைக் கூப்பிட்டான். "நீ எப்படியடா என்னை அடக்கம் பண்ணுவாய்?" என்றான். "நான், உனக்காகச் செலவே பண்ணமட்டேன். உன்னைவைத்துப் பிழைத்துக் கொள்வேன் என்றான்" "எப்படி?" என்று கேட்டான் தந்தை. "உன்னைதுண்டு துண்டாக வெட்டி ஒரு கூடையில் கொட்டி தலையில் தூக்கிக்கொண்டு தெருத்தெருவாக போவேன். ஆட்டுக்கறி என்று சொல்லி விற்றுக்காசாக்கி விடுவேன்" என்று சொன்னான். "நீதானடா என்பிள்ளை! அப்படியே விற்றுக் காசாக்கிவிடு. ஆனால் அந்த மேலைத் தெருப்பக்கம் மட்டும் போகாதே" என்றான். "ஏனப்பா? என்று கேட்டான் பிள்ளை." அங்கே இருப்பவன் முழுவதையும் கடனுக்குக் கேட்பான். கையில் காசு தரமட்டான் என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# புலிகள் குறித்த தென்பகுதி மக்களின் நிலைப்பாட்டில் நிச்சயம் மாற்றம் வரும்

## அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் வெள்ளப்பெருகினால் பாதிப்படைந்த மக்களுக்கு விடுதலைப்புலிகள் உதவி வழங்கியமை, அவர்கள் தொடர்பாக தென்பகுதி மக்கள் கொண்டிருந்த அபிப்பிராய பேதங்களை நீக்குமென கடற்றொழில் கடல்வள அமைச்சர் மகிந்த விஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக கடந்த சனியன்று மாத்தறைக்குச் சென்ற விடுதலைப்புலிகளின் பிரதி நிதிகளை வரவேற்று உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், விடுதலைப்புலிகளின தென்பகுதி விஜயம் இலங்கை அரசியல் வரலாற்றின் முக்கியமானதாக அமைந்துள்ளது.

இதேவேளை, டோக்கியோவில நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்வதன் மூலம் நாட்டில வடக்குத்தெற்கு என்ற பாகுபாடு இல்லாதநிலையை தோற்றுவிக்கலாம் என்று தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என அன்பான செய்தி ஒன்றை தாம் விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(த)

# கட்சி உறுப்பினர்களின் கொலைகளை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது

## ஜனாதிபதி கடும் சினம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தென்மாகாண சபையின் மீன்பிடி வளத்துறை அமைச்சர் ஆர். எம். றஞ்சித் நேற்று முன்தினம கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டமை கொடூரமானதும், மிலேச்சத்தனமானதுமான நடவடிக்கை என ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க விடுத்துள்ள இக் கொலை குறித்த கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், இத்தகைய கொலைச் சம்பவங்களும் குற்றச் செயல்களும் கொழும்பு நகரின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இடம்பெறுவதால், இலங்கையின் சட்ட ஒழுங்கு விதிகள் சரிவரப் பேணப்படவில்லை என்பதுடன், அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறையின் நடவடிக்கைகள் குறித்தும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொதுஜனஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்ந்தும் படுகொலை செய்யப்பட்டு வருவதை இனி ஒரு போதும் அனுமதிக்கவோ அன்றி பொறுத்துக் கொள்ளவோ முடியாது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவி ஏற்ற காலம் முதல், பொ.ஜ.மு. உறுப்பினர்கள் மற்றும ஆதரவாளர்கள் 60 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 3 ஆயிரத்துக்கும் அதிகமான ஆதரவாளர்கள் பல இழப்புக்க்ளைச் சந்தித்துளளனர்.

ஆயினும், இவ்விடயங்கள் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு எந்தவித நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை. இதனால் எனது பொறுமை எல்லைகடந்து விட்டதுடன் தனது பொறுமையை சோதிக்க வேண்டாம் எனவும் அவர் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கால் நடைவளர்ப்பு அமைச்சர் எஸ்.பி. திஸ்ஸநாயக்க மற்றும் புத்தளத்தின் அரசியல்வாதி ஒருவர், பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோர் தொடந்தும் வன்முறைகள், அடாவடித்தனங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் மீது இது போன்ற பழிவாங்கும படலம் தொடரும் பட்சத்தில்



தாம் பொறுமையை இழந்து சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டி நேரிடும் என்று எச்சரித்துள்ளார்.

இதேவேளை, இக்கொலை சம்பநதமான விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமென பிரதமர் தெரிவித்திருப்பதை உடனடியாக நிரகரித்த ஜனாதிபதி அறிக்கை சமர்ப்பிக்கும் விடயங்கள் கேலிக்கூத்தானவை என கூறியுள்ளார். (தி)

## இராசி பலன்

27.05.2003

**(வைகாசி-13, செவ்வாய்)**
**துவாதசி பி.இ. 4.29 வரை**
**ரேவதி பி.ப. 3.38வரை**
**இராகுகாலம் 2.52 -4.22**
**சுபநேரம் 10.22 -11.52**
**சித்தாமிர்தம்**

**மேடம்**
மாதர் நட்பு,முயற்சி கைகூடும், வேலைப்பளு, சுப செலவு

**இடபம்**
எதிர்பாராத நன்மை, உறவினர் சந்திப்பு, எடுத்தகாரியம் சித்தியாகும, தெய்வ சிந்தை

**மிதுனம்**
கடின உழைப்பு, கீழ்ப்படிவு, போசன சுகம், முயற்சி பலிதம்

**கடகம்**
வயிற்றுவலி, பிரயாணம், காரியதாமதம், ஆன்றோர் மதிப்பு

**சிங்கம்**
வீண்தொல்லை, விருந்துபசாரம், முயற்சி தடங்கல், உடல் வியாதி

**கன்னி**
தொழில் சிறப்பு, எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வருகை, தெய்வ சிந்தை

**துலாம்**
சுகவாழ்வு, சத்துருஜெயம், களஸ்திர நன்மை, முயற்சி பலிதம்

**விருச்சிகம்**
சொத்துக்களால் கவலை, சகோதரர் வழி நன்மை, கௌரவக் குறைவு, திடீர் நன்மை

**தனுசு**
பயந்த சுபாவம், வேலைப்பளு, காரியதாமதம், கடுமையான வார்த்தை

**மகரம்**
பிறர் உதவி, செய்தொழில் நன்மை, காரிய சித்தி, போசனசுகம்

**கும்பம்**
அமைதிக்குறைவு, செல்வாக்கு குறைவு, போசனசுகம், அதிக செலவு

**மீனம்**
தெய்வ சிந்தை, பெரியோர் உதவி, பூர்வ புண்ணிய கருமம், முயற்சி கை கூடும்
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

# விலக்குப் பிடித்தவருக்கு பின் கழுத்தில் கடி

(யாழ்ப்பாணம்)

விலக்குப்பிடிக்கச்சென்றவரின் கழுத்தில் கடித்தார் அயலவர்.

இச்சம்பம் நேற்றுமுன்தினம் கரவெட்டி ராஜகிராமப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, சம்பந்தப்பட்ட நபர் எல்லைப் பிரச்சினை காரணமாக அயலவர்கள் இருவரிடையே ஏற்பட்ட சண்டையினை சமரசமாக தீர்க்க முயன்றார் என்றும், அச்சயம் திடீரென பாய்ந்த அயலவர் ஒருவர் விலக்குப்பிடிக்க சென்ற இவரின் பின்கழுத்தைப் பதம்பார்த்தார் எனவும் கூறப்படுகிறது.

இதே பகுதியைச் சேர்ந்த இரத்தினம் யசிந்தன் (வயது -20) என்ற நபரே இவ்வாறு கடிகாயங்களுக்கு இலக்கானவர். இவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-3)

# தொழில்நுட்ப அறிக்கை கிடைத்ததும் சேது சமுத்திரத் திட்டம் அமுல்

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தொழில்நுட்ப வளவாய்ப்புப் பற்றிய அறிக்கை கிடைத்ததும் சேது சமுத்திரத்திட்டம் அமுல் செய்யப்படும் என்று இராமேஸ்வரத்திற்கு விஜயம்செய்திருந்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச பெர்ணாண்டஸ் உறுதியளித்துள்ளார்.

இராமேஸ்வரம், தனுஷ்கோடி, ஆதாமின் பாலம் ஆகிய சேது சமுத்திரத்திட்டத்தில் அடங்கும் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கரையோர காவல்த்துறைப் பணிப்பாளர் நாயகம் அட்மிரல் சுரேஸ்மேத்தா மற்றும் அதிகாரிகள் இராமநாதபுரம் மாவட்ட கலக்ரர் விஜயகுமார் ஆகியோரும அமைச்சருடன் அங்கு சென்றிருந்தனர்.

பாக்குநீரிணைப்பகுதி மற்றும் மன்னார் குடாப்பகுதிகளில் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றி அதிகாரிகள் அமைசசருக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

பிரதமர் வாஜ்பாய் சேது சமுத்ரத்திட்டத்தை அமுல்படுத்துவதில் மிகவும் ஆவலாக உள்ளார். தொழில் நுட்ப அறிக்கை கிடைத்ததும் வேலை ஆரம்பமாகும் என்று அங்கு அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

# சனி, வியாழன், ராகு, கேது மாற்றங்களால் ஏற்படும் பொதுப் பலனை அறிந்து கொள்ளுங்கள்!

**சனிமாற்றம் (22.05.2003) பொதுப் பலன்கள்**

22.05.2003இல் சனி இடபராசியில் இருந்து மிதுன ராசிக்கு மாற்றமடைந்து இரண்டரை வருடங்கள் வரை மிதுனத்திலேயே சஞ்சாரம் செய்யும்.

23.07.2003 இல் வியாழன் கடக ராசியில் இருந்து சிங்க ராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடம் வரை சிங்க ராசியிலேயே வியாழன் சஞ்சாரம் செய்யும்.

14.08.2003இல் இராகு, கேதுக்கள் இடபம், விருட்சிகத்தில் இருந்து முறையே மேடம், துலாம் இராசிகளுக்கு மாற்றமடைந்து ஒன்றரை வருடங்கள் வரை அவ ராசியிலேயே சஞ்சாரம் செய்யும். இக்கிரக மாற்றத்தினால் இவ்வருடம் இலங்கையில் அரசியல், இராணுவ, சமூக, பொருளாதார மாற்றங்கள் உண்டாகும்.

## கடகம்:

*(புனர்பூசம் நாலாம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த கடகராசியினருக்கு சனி பகவான் 22.05.2003 முதல் 26.06.2005 வரை விரயஸ்தானம் எனும் 12ல் இருப்பார்)*

கடையில் கண்ணாயிருக்கும் கடக ராசி நேயர்களே! கடந்த 2 1/2 வருட காலமாக சனி பகவான் உமது ராசிக்கு 11ஆம் வீட்டிலிருந்து நற்பலன் தந்தார். மூன்று, ஆறு, பதினொன்றில் மந்தன் நின்றால் மகத்தான யோகம். சொல்லு பலனுக்கு! என்ற கூற்றுக்கிணங்க எண்ணற்ற நன்மை செய்தது. முத்தசகோதர வழியில் நன்மை விளைந்தது. சிலருக்கு விவாகரத்துக் கிடைத்தது. சிலருக்கு இளைய தாரம் அமைந்தது. பதவி உயர்வு கிடைத்தது.

தற்சமயம் சனி பகவான் உமது ராசிக்கு 12ல் வருகிறார். இது ஏழரைச் சனியின் ஆரம்பம். ''கோளப்ப கடகம் தேள், சிங்கம், ஜென்மம் கெடுதி மிக்க செய்வானடா. வேலுணடு நாளப்பா நலமாகும் மற்றராசி'' என்ற புலிப்பாணியின் பாடல்வரிகள் உம்மை அச்சுறுத்துவது தெரிகிறது. எனினும் சனி பகவான் 8-க்கு உடையவர். அவர் 12 மறைந்து ''கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்'' என்ற கூற்றின்படி நன்மையே செய்வார் எனக் கொள்ளவேண்டும்.

சனி பகவான் தனது 3,7,10 ஆகிய பார்வையின்படி உமது ராசிக்கு 2,6,9 ஆகிய வீடுகளை பார்வை செய்வார்.

சனி பகவானின் 3வது பார்வையினால் உமது ராசிக்கு 2வது வீட்டைப் பார்வை செய்வதால், வாக்கினால் வளமும், நலமும் சேரும். மனைவியின் மூலம் பணவரவுக்கு இடம் உண்டு. புதிய முதலீடுகள் பெருக இடம் உண்டு. கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண்ணில் சிறு சிறு உபாதைகள் வரவாய்ப்புள்ளது.

சனிபகவானின் 7வது பார்வையினால் உமது ராசிக்கு 6 வது வீட்டைப் பார்வை செய்வதால், கடன்கள் குறையும், பரிசுகள், பட்டம், பதவிகள் தேடிவரும். விரோதிகள் வசமாவர். புதியமுதலீடு செய்ய போதிய கடன் வசதிகிட்டும்.

சனி பகவானின் 10-வது பார்வையினால் உமது ராசிக்கு 9-வது வீட்டைப் பார்வை செய்வதால், தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும். வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும். சிலர் மனைவி பேரில் வீடு, வண்டி, வாகனம் வாங்க இடம் உண்டு.

*வியாபாரிகளுக்கு:* பொறியியலாளர், இரும்பு, வர்ணம், கலைச் சாதனங்கள், தோட்டத்தொழில், மின்னியல், இலத்திரனியல் போன்ற பிரிவுகளில் இலாபம் மிகுந்து காணும். சிலருக்கு வெளிநாடுகளுக்கு சரக்கு அனுப்ப வேண்டிய அனுகூலமான ஆணை கிட்டும்.

*விவசாயிகளுக்கு:* பயிர்பாதுகாப்பில் கவனம் தேவை. தண்ணீர்ப் பஞ்சம் தீரும். பணப் பயிர்கள் நல்ல விளைச்சல் தரும். பூர்வீக நிலம் சீர்திருத்தம் ஆகும். விவசாய சாதனங்கள் நவீன மயமாக்க இடமுண்டு. மானாவரி நிலம் நல்ல லாபம் தரும்.

*பெண்களுக்கு:* நீண்ட காலமாக புத்திரபாக்கியம் இல்லாமல் தவித்தவர்களுக்கு புத்திர பாக்கியம் கிட்டும். ஆடை, அணிமணிகளின் சேர்க்கை உண்டாகும். உமது விருப்பத்தை கணவர் நிறைவேற்றுவார். மாமியார், மாமனார் மூலம் பிரச்சினை இருக்காது.

*உத்தியோகஸ்தர்களுக்கு:* தீயணைப்பு, வரி, கால்நடை மருத்துவம், மண் பரிசோதனை, நிலத்தடி நீர், பொலிஸ், இராணுவம், விளையாட்டுப் போன்ற துறைகளில் பணி புரிவோர் மிகவும் ஏற்றம் அடைவர். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, மனமகிழ்ச்சி கிட்டும்.

*மாணவர்களுக்கு:* படத்தொழில்நுட்பம், ஹோட்டல் தொழில்நுட்பம், பேக்கரி, சுற்றுச்சூழல், நிதி, மின்னியல், இலத்திரனியல், பொதுஜனத் தொடர்பு, நூலகவியல், பத்திரிகைத்துறை போன்ற துறைகளில் பயில்வோர் ஏற்றமடைவர். சிலர் வெளிநாடு செல்ல இடமுண்டு.

*கலைஞர்களுக்கு:* அவுட்டோர் யூனிட், மின்னியல், ஸ்டண்ட், ஒப்பனை, கிரா·பிக்ஸ், டப்பிங் குரல், போன்ற பிரிவினர் ஏற்றம் பெறுவர். எனினும் அதிக வேலைப் பழுவுடன் பணிபுரிய இடமுண்டு. புதிய முயற்சிகளில் விடாமுயற்சி தேவை.

### குருபகவான் சஞ்சார பலன்

22.07.2003 வரை குரு பகவான் ஜென்மராசியில் சஞ்சாரம். இதனால் வெளிநாடு செல்ல வாய்ப்பு வரும். தடைகள் விலகும். தனவசதிகள் பெருகும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும். தந்தை மூலம் தனவரவுக்கு இடமுண்டு.

23.07.2003 முதல் 14.08.2004 வரை குருபகவான் 2ல் வருவதால், குடும்பத்தில் சுப செலவுகள் வந்த வண்ணமிருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் வரும். எனினும் சமாளித்து விடலாம்.

15.08.2004 முதல் 13.05.2005 வரை குருபகவான் 3ல் வருவதால் தூரத்து நற்செய்திகள் வரும். வீடு, மனை வாங்க இடமுண்டு. தாயார் மூலம் தனவரவுக்கு இடமுண்டு. பொதுஜனத் தொடர்பு துறையில் பணி புரிவோர் ஏற்றம் காண்பர்.

14.05.2005 முதல் குரு பகவான் உமது ராசிக்கு 4ல் வருவதால் போக்குவரத்தில் கவனம் தேவை. கல்வி பயிலும் மாணவர்கள் மிக்க கவனமுடன் படிப்பது நலம். கவனம் திசை மாறாமல் இருப்பது நலம். கல்விச் சுற்றுலா செல்ல நேரும்.

### ராகுபகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை ராகு பகவான் உமது ராசிக்கு 11ல் சஞ்சாரம். இதனால் எதிர்பாராத தனவரவுக்கு இடமுண்டு. விதவை மாதரால் அனுகூலம் உண்டு. எனினும் பணம் கையாளும் பதவியில் இருப்பவர் கணக்கில் கவனம் வைக்கவும்.

15.08.2003 முதல், 04.03.2005 வரை ராகு பகவான் 10-ல் வருவதால் எந்தக் காரியத்தை எடுத்த போதிலும் அலைக்கழிப்புக்கு இடமுண்டு. எனினும் கடகத்துக்கு ராகு மிகவும் நல்லவர். எனவே கெடுதிகள் இல்லை. மின்னியல், இலத்திரனியல், கணனி போன்ற பணிகளில் சிறப்படையலாம்.


05.03.2005 முதல் 21.09.2006 வரை ராகுபகவான் 9-ல் இருப்பதால் தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. புதிய முதலீடுகளில் அதிக எச்சரிக்கை தேவை. வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும். திருப்பணிகள் செய்ய நன்று. வேறு மொழி பேசுவோரால் அனுகூலம் உண்டு.

### கேது பகவான் சஞ்சார பலன்

14.08.2003 வரை கேது பகவான் உமது ராசிக்கு 5ல் இருப்பதால் உயர் கல்வி பாயில்வோர் மிகவும் கடினமான பிரயாசை எடுப்பது நலம். குறிப்பாக மருத்துவம் பயில்வோர் அதிக பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட வெற்றிநிச்சயம்.

15.08.2003 முதல் 04.03.2005 வரை கேது பகவான் 4-ல் வருவதால் வீடு, மனை, பூமி வாங்கும் போது அதன் மூல பத்திரம் சரிபார்த்து வாங்குவது நலம். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. போக்குவரத்தில் பணம் பத்திரம்.

05.03.2005 முதல் 21.09.2006 வரை கேது பகவான் 3-ல் வருவதால் இறை அருள் கூடும். இன்னல் விலகும். பிரார்த்தனைகளில் பலிதம்



உண்டாகும். கிரக பலமற்ற சிலருக்கு இடுமருந்தினால் இன்னலுக்கு இடமுண்டு. விநாயகரை பக்தி சிரத்தையுடன் வழிபட நன்று.

### சனி பகவான் சஞ்சார பலன்

22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் தொழில் வழியில் அனுகூலம் மிகுந்து காணும். மனைவி பேரில் வீடு, மனை, பூமி வாங்க இடமுண்டு. சகோதர வழியில் பகை விலகும். அரசியலில் செல்வாக்குக்கூடும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் ராகு சாரத்தில் சஞ்சாரம் செய்வதால், சரளமான பண வரவுக்கு இடமுண்டு. பிரிந்த தம்பதிகள் இணைந்து வாழ இடமுண்டு. வேறு மொழி பேசுவோரால் அனுகூலம் உண்டு.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் குரு பகவான் சாரத்தில் சஞ்சரிப்பதால் கடன் தீரும். பகை விலகும், கோட் வழக்கில் வெற்றி கிட்டும். தந்தையின் உடல் நலனில் முன்னேற்றம் காணலாம். வெளிநாடு செல்ல இடமுண்டு.

### சனி பகவான் வக்கிரம்

25.11.2003 முதல் 16.02.2004 மற்றும் 13.11.2004 முதல் 13.03.2005 வரை சனிபகவான் வக்கிரம் ஆகிறார். இதனால் எடுக்கும் புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். 8-க்குடைய சனி பகவான் வக்கிரமடைவதால் தவறில்லை. மனைவின் உடல் நலனில் கவனம் தேவை. புதிய தொழில் கூட்டாளிகளைச் சேர்ப்பதில் அவசரம் காட்ட வேண்டாம்.

### நட்சத்திர பலன்

**புனர்பூசம் 4ஆம் பாதம் பிறந்தவர்களுக்கு:** உமது நட்சத்திர நாயகர் குரு பகவான். சனிபகவானுக்கு நட்பு நிலையே. திருமணமாகாதவர்களுக்கு திருமணமாகும். நீண்ட காலமாக புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் கிட்டும். தனவசதிக்குக் குறைவில்லை.

**பூச நட்சத்திரத்திற் பிறந்தவர்களுக்கு:** உமது நட்சத்திர நாயகன் சனி பகவான். இதனால் சனி பகவான் நன்மையே தருவார். கணவன், மனைவி இடையில் நல்ல சுமுகமான உறவுகள் நிலவும். சுற்றமும் நட்பும் சூழ்வர்.

**ஆயிலியம் நட்சத்திரத் திற் பிறந்தவர்களுக்கு:** உமது நட்சத்திர நாயகன் புதன். அவர் விரயாதிபதியும் 3ஆம் அதிபதியும் ஆவர். இதனால் கடன் தீரும் நல்ல செய்திகள் வரும். இளைய சகோதரர் வழியில் ஏற்றம் உண்டு. சுப செலவுகள் வர வாய்ப்புள்ளது.

### தாராபலன்

**புனர்பூசம் 4ம் பாதம் பிறந்தவர்களுக்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் மைத்ர தாரையில் சஞ்சாரம் செய்வதால் சுப நிகழ்ச்சிகள் நிகழ வாய்ப்புள்ளது. சகோதர வழியில் சந்தோசம் உண்டு. நிலபுலன்கள் வாங்க இடமுண்டு. அரசியலில் செல்வாக்கு கூடும்.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் பரம மைத்திர தாரையில் சஞ்சாரம் செய்வதால் தொட்டது துலங்கும் விட்டது தொடரும் சுப செலவுகள் தொடரும். கடன் தீரும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனி பகவான் ஜென்ம தாரையில் சஞ்சாரம் செய்வதால் உடல் நலனில் கவனம் தேவை. எந்தக் காரியம் ஆனாலும். திட்டமிட்டுச் செய்தால் விடாமுயற்சியினால் வெற்றிவாகை சூடலாம்.

**பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் வதை தாரையில் சஞ்சாரம். இதனால் மனைவியின் உடல் நலனில் கவனம் தேவை. தொழில்நுட்பப் பணியினர் மிகவும் கவனமுடன் பணிபுரிவது நலம். கீழ் நிலை சிப்பந்திகளை அமர்த்துவதில் மிக்க எச்சரிக்கை தேவை.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் மைத்திர தாரையில், இதனால் சுப நிகழ்ச்சிகள் நிகழ வாய்ப்புள்ளது. எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். வேறு மொழி பேசுவோரால் அனுகூலம் கிட்டும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் பரம மைத்திர தாரையில் சஞ்சாரம். இதனால், அதிக சுபங்கள் நிகழும். விருந்து பசாரம், பரிசு, பதவி என கிடைத்த வண்ணம் இருக்கும். பெரிய மனிதர்களின் நட்புக் கிட்டும்.

**ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு:** 22.05.2003 முதல் 10.07.2003 வரை சனி பகவான் பிரத்யக்கு தாரையில் சஞ்சாரம். இதனால் செய்யும் தொழில் எதுவானாலும் மிக்க கவனமுடன் இருப்பது நலம். குறிப்பாக பண பரிவர்த்தனை செய்யும் பிரிவினர் மிக்க எச்சரிக்கையுடன் செயல்பட நன்று.

11.07.2003 முதல் 06.01.2004 மற்றும் 07.01.2004 முதல் 14.07.2004 வரை சனிபகவான் க்ஷேமத் தாரையில் சஞ்சாரம். இதனால் தொட்டது துலங்கும். வீடு, மனை, பூமி வாங்கலாம். குடும்பத்தில் விருந்தினர் வருகை அதிகரிக்கும். நோய் அகலும். மகிழ்ச்சி பெருகும்.

15.07.2004 முதல் 26.06.2005 வரை சனிபகவான் விபத்துத் தாரையில் சஞ்சாரம். இதனால் போக்குவரத்தில் கவனம் தேவை. வர்த்தகத் துறை போன்ற பிரிவினர் மிகுந்த கவனமுடன் பணிபுரிதல் அவசியம்.

### பரிகாரம்

உமது ராசிக்கு 12ல் சனி பகவான், குரு பகவான் 1,2,3,4 ஆகிய வீடுகளிலும், ராகு பகவான் 11,10,9,8 ஆகிய வீடுகளிலும் கேது பகவான் 5,4,3,2 ஆகிய வீடுகளிலும் முறையே சஞ்சரிப்பர்.

தினசரி சனிபகவான் காயத்திரி மந்திரம் ''காகத்வஜாய வித்மஹே கட்க ஹஸட்தாய தீமஹி தன்னோ மந்த பிரயோதயாது'' என்ற மந்திரத்தை 108 முறை ஜெபிக்கவும்.

**ஜோதிட மணி துரைராஜ்**

இயன்ற அளவு தான தருமம் செய்க. பிரதி வியாழன் தட்சணாமூர்த்திக்கு நெய் தீபமேற்றி, மஞ்சள் வண்ண மலரால் அர்ச்சிக்கவும். பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க. சிவ புராணப் பாராயணம் செய்க. துர்க்கைக்கு செவ்வாய் ராகு காலத்தில் தீபம் ஏற்றவும். துர்க்காஸ்தவம் பாராயணம் செய்க. சங்கடஹர சதுர்த்தியில் விநாயகருக்கு அறுகம்புல் அர்ச்சனை செய்து வணங்கவும்.

(தொடரும்)

## மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெப் ஆகியவற்றின் அனுசரணையுடன் சிறுவர்கழகங்களின் இணையம் நடாத்திவரும் மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சி, இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், எதிர்வரும் 29,30ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது. (உ-10)

## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/= மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ''தாய் அன்பிற்கு நிகரேது''

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் **31.05.2003** ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-3**

மாணவர் முழுப் பெயர் :------------------------------

பாடசாலை :------------------------------

:------------------------------

கற்கும் தரம் :--------------

உறுதிப்படுத்துகிறேன்

--------------------

ஆசிரியர்

# ஸ்பெயினின் துருப்புக்களை ஏற்றிச் சென்ற விமானம் வீழ்ந்து நொருங்கியது

## துருக்கியில் சம்பவம்; 74 பேர் பலி

(அங்காரா)

உக்ரைன் நாட்டுக்குச் சொந்தமான விமானமொன்று துருக்கியின் வடமேற்குப் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 74 பேரும் உயிரிழந்துள்ளனர்.

கிர்கிஸ்தான் விமான நிலைய சேவையில் ஈடுபட்டிருந்த இந்த விமானம், கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கிலிருந்து ஸ்பெயின் நோக்கி சென்றுகொண்டிருந்தவேளை விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விமானத்தில் 62 ஸ்பெயின் நாட்டுத் துருப்பினரும், 12 விமானிகளும் பயணம் செய்தனர் என்று பிஷ்கெக் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெற்றோல் நிரப்புவதற்காக துருக்கி விமான நிலையம் ஒன்றில் தரையிறங்கவிருந்த சில மணி நேரத்திற்கு முன்னர் இந்த விமானம் விபத்துக்குள்ளாகப் போவதை அறிந்த விமானி, அதனைத் தரையிறக்க இரு தடவைகள் முயற்சித்துள்ள போதும், அது பயனளிக்காமல் விமானம் தரையில் வீழ்ந்து நொருங்கியுள்ளது. (உ-2)

# ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம்

## ஒருவர் பலி; 22பேர் காயம்

(கராகஸ்)

வெனிசுவெலாவின் கராகஸ் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊர்வலம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஒருவர் கொல்லப்பட்டதுடன் 22பேர் காயமடைந்துள்ளனர்.

இடது சாரி எதிர்க்கட்சியினரின் ஊர்வலம் ஒன்றின் போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

காயமடைந்தவர்களில் 3பேர் தேசிய பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

ஊர்வலம் இடம்பெற்ற வேளையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்தி, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்புத் தரப்பினர் முயன்றபோதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் 22 பொது மக்கள் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் கராகஸ் தீயணைப்புப் படைத் தலைவர் ரொடல் போவ்பிறிவினோ தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக அரச தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-9)

# இந்தோனேஷிய ஆச்போராளிகளின் 80 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன

(ஜகார்த்தா)

இந்தோனேஷியா ஆஷேமாநிலத்தில் இடம்பெற்றுவரும் மோதல்களில் பலியான சுமார் 80 பேரின் சடலங்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக இந்தோனேஷிய செஞ்சிலுவைச்சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்த மாநிலத்தில் கடும் மோதல்கள் தொடர்ந்து நடைபெறுவதாக இந்தோனேஷியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மோதலின் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பான உண்மையான விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-9)

# பாக் - இந்தியா இடையில் நிலவும் பதற்றத் தணிப்புக்கு பங்களிக்க முடியும்

## புதுடில்லி- இஸ்லாமபாத் மேஜர் அறிவிப்பு

(ரோம்)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையே நிலவும் பதற்ற நிலையைத் தணிப்பதற்கு தம்மால் முக்கிய பங்கு வழங்க முடியும் என இரு நாடுகளினதும் தலைநகரங்களின் மேஜர்கள் உறுதிபடக் கூறியுள்ளனர்.

இத்தாலி தலைநகர் ரோமில் கடந்த வாரம் நடைபெற்ற மேஜர்களிற்கான மாநாட்டிலேயே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

40ற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைநகர் மேஜர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் கருத்து வெளியிட்ட புதுடில்லி மேஜர்,

ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படும் அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளில் அந்நாட்டின் நகர மேஜர்கள் அதிக பொறுப்பு வகிக்க வேண்டிய கடமை உள்ளது.

இந்த வகையில், தற்போது இந்தியா-பாகிஸ்தானிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்தற்கு எங்களுடைய பங்களிப்பு அவசியமானது என்று கூறியுள்ளார்.

இந்த கருத்தை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத் மேஜர் ஏற்றுக் கொண்டுள்ளதுடன், அதற்கு தமது பங்களிப்பு வழங்கப்படும் என உறுதிவழங்கியுள்ளார். (உ-2)

# வேண்டிய நாடுகள் பட்டியலில் இந்தியாவிற்கு சிறப்பிடம்

## பாகிஸ்தான் ஆலோசிக்கிறது

(இஸ்லாமபாத்)

தமக்கு மிகவும் வேண்டப்பட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவிற்கு சிறப்பு அந்தஸ்து வழங்குவது பற்றி பாகிஸ்தான் ஆலோசித்து வருகின்றது.

இது தொடர்பான ஆய்வுக் கூட்டம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் வெளியுறவுத்துறை அமைச்சக அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப் போவதாக இக்கூட்டத்தில் பங்கு கொள்ளும் பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-2)

# அல்ஜீரிய அனர்த்தம் உயிரிழந்தோர் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியது

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவில் கடந்த வாரம் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சியில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மூவாயிரத்தைத் தாண்டியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் இதுவரை 2ஆயிரத்து 100 பேரின் சடலங்களை மீட்டுள்ளனர்.

எனினும், கட்டட இடிபாடுகளுக்குள் இன்னும் பலரது சடலங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, மீட்புப்பணியாளர்களுக்கும் அல்ஜீரிய அரசிற்குமிடையே சர்ச்சைகள் எழுந்துள்ளன.

மீட்புப் பணிகளுக்கு தேவையான உபகரணங்கள், வசதிகள் எதனையும் பெற்றுத் தரவில்லை என்றும், இதனால் தமது பணிகளைப் பூரணமாக செய்து முடிக்க முடியாதுள்ளதாகவும் மீட்புப் பணியாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (உ-2)

# ஐவரிக் கோஸ்ட் பாதுகாப்புப் பணியில் மேற்காபிரிக்கப் படைகள்

(அபிட்ஜான்)

மேற்காபிரிக்க இராணுவத்தினர் நேற்று முன்தினம் முதல் ஐவரிக் கோஸ்ட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யுத்த நிறுத்த பிரகடனம் செய்யப்பட்டுள்ள ஐவரிக்கோஸ்ட் பகுதியில் இந்த இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் முதல் தீவிரவாதிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில், இடம்பெற்றுவந்த மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐவரிக் கோஸ்ட் அரசு தெரிவித்துள்ளது. (உ-2)

# உண்ட வீட்டுக்கு இரண்டகம் ஜம்மு-காஷ்மீரில் சம்பவம்

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரை பயங்கரவாதிகள் சித்திரவதை செய்து கொன்றுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரின் கயூரி மாவட்டத்தில் கேரி கிராமத்தில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த தீவிரவாதிகள், அவர்களிடம் உணவை கேட்டு வாங்கி அருந்திய பின்னர், அங்கிருந்த ஐவரை சித்திரவதை செய்து கொன்றுவிட்டு சென்றுள்ளனர்.

தீவிரவாதிகள் மேற்படி வீட்டிற்கும் தீயிட்டுச் சென்றதால் கருகிய நிலையிலேயே ஐவரினதும் சடலங்கள் கிடைக்கப்பெற்றதாக கயூரி மாவட்ட சி.பி.ஐயினர் தெரிவித்துள்ளனர். (உ-2)

# மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் இஸ்ரேல் அமைச்சரவை அங்கீகாரம்

(ரெல்அவிவ்)

அமெரிக்க ஆதரவுடன் சர்வதேச சமூகத்தினால் முன்வைக்கப்பட்ட மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்திற்கு இஸ்ரேல் அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் இந்தச் சமாதானத் திட்டத்தை நேற்று முன்தினம் தனது அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பித்திருந்தார்.

இதனை விரிவாக அராய்ந்த இஸ்ரேல் அமைச்சரவை, இறுதியில வாக்கெடுப்பினை நடத்தி 5 வாக்குகள் விதியாசத்தில் அதனை அங்கீகரித்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் பிரசன்னத்துடன், இஸ்ரேல்-பலஸ்தீனத் தலைவர்களிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான சந்தர்ப்பம் தோன்றியுள்ளதாக அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

இந்த அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் அமைச்சரவையில் கருத்து வெளியிட்ட இஸ்ரேல் பிரதமர், இஸ்ரேலும்-பலஸ்தீனமும் துண்டாடப்படும் காலம் வந்துவிட்டதென கூறியுள்ளார். (உ-9)

# அணுத் திட்டம் குறித்த முத்தரப்புப் பேச்சுக்களிற்கு வடகொரியா தயார்

(பியோங்யாங்)

வடகொரியா தனது அணுவாயுதத் திட்டம் குறித்து தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது.

நேற்று இந்த அறிவிப்பை விடுத்த வடகொரியா முதலில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென நிபந்தனையினையும் விதித்துள்ளது.

கடந்த மாதம் சீனாவுடன் இணைந்து தாம் நடத்திய முத்தரப்புப் பேச்சுவார்த்தை குறித்து அமெரிக்கா மௌனம் சாதித்து வருகின்றது. இதனிடையே வடகொரியாவிற்கும் அமெரிக்காவுக்குமிடையே தனிப்பட்ட பிரச்சினைகள் இருந்து வருகின்றன.

இவற்றுக்கு முதலில் தீர்வு காணும் நோக்கிலேயே மேற்குறித்த நிபந்தனை முன்வைக்கப்பட்டதாக வடகொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-2)

# தீவிரவாத அச்சுறுத்தல் மூடிய தூதரகங்களை திறக்கிறது அமெரிக்கா

(ரியாத்)

சவுதி அரேபியாவில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக தமது தூதரகங்களை கடந்த 4 நாட்களாக மூடியிருந்த அமெரிக்கா தற்போது அவற்றை மீண்டும் திறந்துள்ளது.

எனினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 30 அத்தியாவசியமற்ற பணியாளர்களை அலுவலகத்திற்கு வராமல் வீடுகளிலேயே இருக்கும்படி சவுதி தலைநகர் ரியாத்திலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் ரியாத்தின் குடியிருப்புப் பகுதிகளில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தொடர் தற்கொலைத் தாக்குதல்களில் பெருமளவினர் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

# ஆப்கான் அதிபர் எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமிட்கர்ஸாய் தனது பதவியை இராஜினாமாச் செய்ய நேரிடும் என எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் எல்லைப்புற மாகாணங்களில் அறவிடப்பட்ட சுங்க வரிகளை மத்தியஅரசிற்கு வழங்க மாகாண நிர்வாகங்கள் தவறியதை அடுத்தே இவர் இந்த அறிவிப்பினை விடுத்துள்ளார்.

இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் சுங்க வரிப்பணம் மத்திய அரசிற்கு கிடைக்காது விட்டால், தான் பதவியை உடன் விலக்கிக் கொள்ளப்போவதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார். (உ-2)

# மன்னன் நிலை குறித்து மக்கள் அதிருப்தி

(ராபர்ட்)

மொரோக்கோவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்து அந்நாட்டு அரசர் மொகமட் இதுவரை எந்தவொரு கருத்தையும் வெளியிடாததையிட்டு மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்தக் குண்டுவெடிப்பில் 43 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்திருந்தனர்.

எனினும், அரசர் மொகமட் இச்சம்பவம் குறித்து அமைதியாக இருப்பது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதென மொரோக்கோ மக்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதலில் அல்கெயடா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் தொடர்பு பட்டிருப்பதாக அமெரிக்கா தெரிவித்த போதிலும் மோரோக்கோ அதிபர் இது குறித்தும் எக்கருத்தினையும் வெளியிடவில்லை என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# புலிகளின் கோரிக்கை குறித்து நோர்வே கூடிய கவனம் செலுத்துகிறது

## பீற்றர்சன் பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப்புலிகள் முன் வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை அமைப்பு குறித்து நோர்வே அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வருவதாக அந் நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வைக் காணும்வரை தொடர்ந்து உதவி செய்ய நோர்வே அரசு தயாராகவுள்ளது. அத்துடன் இரு தரப்பினருக்கும்இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நோர்வே அரசாங்கம் தொடர்பாளராகவும் ஏனைய வசதிகளை செய்து கொடுக்கவும் உள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளினால் கோரப்பட்ட இடைக்கால நிர்வாகசபை கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், லங்கா சமசமாஜக் கட்சியும் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

### சீடா நிறுவன நிதியுதவியுடன்

## சிறையில் வாடுவோருக்கு சலுகை வழங்கத் திட்டம்

(கொழும்பு)

நீதி மன்றங்களினால் விதிக்கப்படும் தண்டப்பணம், பிணைப் பணம் என்பவற்றைச் செலுத்த முடியாத நிலையில் சிறையில் வாடுபவர்களின் நலன் கருதி அவர்களுக்கு சலுகை வழங்கும் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த மனித வள சுற்றாடல் தொடர்பான அபிவிருத்தி இயக்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான நிதியுதவியை சீடா நிறுவனம் வழங்கியுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் பிரகாரம்5 ஆயிரம் ரூபாவுக்குட்பட்ட தண்டப் பணம்அல்லது பிணைப்பணத்தினைச செலுத்த முடியாத நிலையில் உள்ள, சிறிய குற்றங்களைப் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்களை மாத்திரம் இவ்வியக்கம் முன்னின்று அவர்களைக்காப்பாற்றி சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளது.

அத்துடன் மனித உரிமைகள் தொடர்பான தொண்டர்களில் 100 பேரை பயிற்றுவித்து இச் சேவையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கம் காலி சிறைச்சாலைக்கு அருகே உள்ள சலுகைநது சேவைக் காரியாலயத்தில் இயங்கவுள்ளது. (உ-10)

# புலிகளின் கோரிக்கையை நிறைவேற்றினால் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்குவோம்

## ஜே. வி. பி. எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை அரசியல் யாப்புக்கு முரணான வகையில் நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்குமானால், அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி நாட்டு மக்களுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

புலிகளின் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபை அமைப்பை பொது ஜன ஐக்கிய முன்னணி, லங்கா சம சமாஜக் கட்சி உட்பட நாங்களும் எதிர்த்து வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(தி)

### தென்மாகாண சபை அமைச்சர்

## கொலைச் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

தென்மாகாண சபையின் மீன்பிடி, நீர்பாசன, விவசாயத்துறை அமைச்சர் எம்.கே. ரஞ்சித்தின் படுகொலை சந்தேக நபர்களை அடையாளம் கண்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் T.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் விசேட பொலிஸ குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இக்கொலையை பாதாள உலகக் கோஷ்டியினரே செய்திருப்பதாகவும கொழும்பின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இக்கொலைச் சம்பவம நடை பெற்றுள்ளதால் பொலிஸார் தீவிர கவனத்துடன் செயற்பட்டு வருகின்றனர் எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும்தெரிவித்துள்ளார். இக் கொலைச் சம்பவம் குறித்து பொலிஸ் திணைக்களத்தில் நேற்று விசேட க்லந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.(தி)

# துரையப்பா விளையாட்டரங்கை செம்மைப்படுத்த 115 இலட்சம்

### விளையாட்டுத்துறை அமைச்சு ஒதுக்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தேசிய விளையாட்டு விழாவினை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு விளையாட்டுத்துறை அமைச்சு 115 இலட்சம் ரூபா நிதியை யாழ். மாநகர சபைக்கு ஒதுக்கியுள்ளது.

இது பற்றி யாழ். மாநகர சபை அதிகாரிகள் கருத்துக்கூறுகையில்,

எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தேசிய விளையாட்டு விழாவினை நடத்துவதன் பொருட்டு மைதானத்தினை சூழ எல்லை வேலிகள் அமைத்தல், மைதானத்தை சீர்படுத்த, நிலக்கீழ் குடிதண்ணீர்த் தாங்கி அமைத்து அதனைச்சுற்றி வேலிகள் அமைத்தல், ஒரு பாதை அமைத்தல் போன்ற இதர வசதிகள் செய்யப்படவுள்ளன.

இதன் முதல் கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இதேவேளை, புனரமைப்பு பணிகள் இடம் பெறவுள்ளமையால் துரையப்பா விளையாட்டரங்கில் இரு மாத கலத்திற்கு வேறு நிகழ்வுகள் ஏதும் இடம் பெற அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-7,77)

# இடைக்கால நிர்வாகத்துக்கு இ. தொ. கா. ஆதரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை கோரிக்கைக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இவ்வாதரவுத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் இ.தொ.கா. முழுமையான ஆதரவு வழங்குமென கட்சியின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கான அனைத்து முயற்சிகளுக்கும் கட்சி முழுமையான பங்களிப்பை வழங்க தயாராகவுள்ளது.

காலம்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமானின் வாக்குறுதிக்கு ஏற்ப வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால், இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுவது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# செய்தித் துளிகள்

## மாணவனை மோதிய ஓட்டோ ஓடி மறைந்தது

(பருத்தித்துறை)

பாடசாலைக்கு முன்னால நிறை மாணவனை மோதிய ஓட்டோ மின்னல் வேகத்தில் ஓடி மறைந்தது. படுகாயமடைந்த மாணவன் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் உள்ள புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை முன்னாலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

புலோலி தெற்கைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் டிலக்ஷன் (வயது 8) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட ஆட்டோவைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (உ-52)

## கந்தபுராணப் படிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு அம்பன் முருகன் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்புக் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகியது. எதிர்வரும் மாதம் 23 ஆம் திகதி வள்ளியம்மன் திருக்கல்யாணமும் மறுநாளான ஆனி உத்தரத தினத்தன்று தீர்த்த உற்சவமும் அன்னதானமும் நடைபெறவுள்ளது. (உ-52)

## கலாதரிசன மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். புதிய உயர் கல்லூரியின் யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தின் கலாதரிசன மலர் வெளியீட்டு விழாவும் நூலகத் திறப்பு விழாவும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் கு.ரஜீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## விபத்தில் இருவர் பலி

போறந்தல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நிறுத்திவைக்கப்பட்ட லொறியுடன் முச்சக்கர வண்டியொன்று மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டிச் சாரதியான ரவீந்திரனும், முச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்த இராணுவ வீரன் சுஜவ ராஜபக்ஷ என்பவருமே உயிரிழந்துள்ளனர். (தி)

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

யாழ். பிரதம தபாலகத்தில் பணியாற்றிய எஸ். செல்வராஜா, யாழ். பிராந்திய தபால் திணைக்கள நிர்வாக அலுவலகத்தில் கடமையாற்றிய ரீ.சிவானந்தன், யாழ். பிராந்திய தபால் திணைக்கள கணக்காளர் அலுவலகத்தில் கடமையாற்றிய ஏ. சிவசோதி ஆகியோர் பருத்தித்துறை தபால் நிலையத்துக்கு உதவித் தபாலதிபர்களாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை தபால் நிலையத்தில் கடமையாற்றிய பீ.திருச்செல்வம் கோப்பாய் தபால் நிலையத்திற்கும், ஆர். விநாயகநாதன் வல்வெட்டித்துறை தபால் நிலையத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பிராந்திய தபால் திணைக்கள கணக்காளர் அலுவலகத்தில் கடமையாற்றிய எஸ். தயாபரன் வல்வெட்டித்துறை தபால் நிலையத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ-52)

## பெறுமதியான முத்திரைகளைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகத்திற்கு உயர் பெறுமதி வாய்ந்த 500, 1000 ரூபா முத்திரைகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் இன்றிலிருந்து பொது மக்கள் தமது தேவைக்காக பெறுமதி வாய்ந்த முத்திரைகளை கொள்வனவு செய்யமுடியும் என பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார். (உ)

## வெங்காயப் பயிரில் பழுப்புநோய்

(பருத்தித்துறை)

அம்பன், குடத்தனைப் பகுதிகளில் வெங்காயப் பயிரில் பழுப்பு நோய் பரவிவருகிறது.

இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் வெங்காயச் செய்கையாளர்கள் பலத்த பாதிப்படைந்து வருகினறனர்.

முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க இம்முறை இப்பகுதிகளில் விவசாயிகள் வெங்காயச் செய்கையில் கூடியளவு ஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-52)

## பாடத்திட்டம் அறிமுகம்

(சுதுமலை)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள், நகர சபைகள், வலயக் கல்விப் பணிமனைகளில் அரச முன்னுரிமை நடவடிக்கைக்கென ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கான பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (உ-252)

# 8200 மாணவர்களுக்கு இவ்வருடம் புலமைப்பரிசில்

(கொழும்பு)

மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியம் ஊடாக இவ்வருடம் 8ஆயிரத்து 200 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தி எய்தி பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான 7ஆயிரத்து 200மாணவர்களும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆயிரம் மாணவர்களுமே இப்புலமைப் பரிசில்களைப பெறவுள்ளனர்.

இதேவேளை,இம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து பெறப்படவேண்டிய நிதி இன்னும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

### அமைச்சரின் கொலை தொடர்பில்

# விரிவான விசாரணைக்கு உள்துறை அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

தென் மாகாணசபை அமைச்சரின் படுகொலை தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்படும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இக் கொலைச்சம்பவம் தொடர்பாக உள்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் காவல் நிலையத்துக்கு அருகில் அமைச்சர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன்,அப்பகுதியில் ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான படையினர் காவல்கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இப்படுகொலை சம்பந்தமான விசாரணைகளின் போது இவ்விடயங்கள் அனைத்தும் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் விசாரணைகளை துரிதமாகவும் நியாயமான அடிப்படையிலும் மேற்கொள்ளும் படியும் அமைச்சர் பொலிஸாருக்கு உததரவிட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

புலிகள் - நோர்வேப் பிரதிநிதிகளை

# ஹெலி மூலம் உள்ஊரில் ஏற்றியிறக்க 20 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவு

## விமானப்படை வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மற்றும் நோர்வேப் பிரதிநிதிகளை கொழும்புக்கும வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கும் மாறிமாறி ஏற்றியிறக்கியதில் இலங்கை விமானப்படைக்கு 20 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவாகியுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கும், மட்டக்களப்பிலிருந்து கிளிநொச்சிக்கும் நோர்வே மற்றும் புலிகளின் பிரதிநிதிகளை விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் ஏற்றிக்கொண்டு செல்வதற்கே இப்பாரிய தொகை நிதி இதுவரை செலவாகியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலங்கு வானூர்தியின் ஒரு மணிநேரப் பயணத்திற்கு 500 அமெரிக்க டொலர் வாடகை அறவிடப்படுகிறது. இதுவரை 40 மணித்தியாலங்கள் நோர்வே, புலிகள் பிரதிநிதிகள் உலங்குவானூர்தியில் பயணம் செயதுள்ளனர்.

இதேவேளை, அரசு - புலிகள் சமாதான முயற்சியின் பொருட்டு நோர்வே அரசாங்கம் 30 இலட்சம் அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளதாக நோர்வே தரப்புத் தகவல் தெரிவித்துள்ளன.

(தி)

### சிவதொண்டன் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையினால் மாதாந்தம் வெளியிடப்பட்டுவரும் சிவதொண்டன் சஞ்சிகையின் மே - யூன் மாதத்திற்குரிய இதழ் வெளிவந்துள்ளது.

(உ-10)

# சமாதான முன்னெடுப்பு நோக்கில் ஹக்கீம் நோர்வே பயணம்

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளினால் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சர் ரவூப் ஹககீம் நோர்வேக்குப் பயணமாகியுள்ளார்.

நோர்வே சென்றுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம், இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு குறித்தும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன்னுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நோர்வேக்குப் புறப்படுவதற்கு முன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருடன் இவ்விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)

# குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணி மிக மெதுவாகவே இடம்பெறுகின்றது

## யுனிசெவ் பிரதிநிதி பி.கனொக் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்களால் மிதிவெடி அகற்றும் பணிகள் மிகமெதுவாகவே இடம்பெறுகின்றன.

சிறுவர்கள் மற்றும் பொதுமக்களை மிதிவெடி அபாயங்கள், அனர்தங்களில் இருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமைப்பாடும் எமக்கு உண்டு.

இவ்வாறு தெரிவித்தார் யுனிசெவ நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்தின் விசேட பிரதிநிதி பி.கனொக்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெவ் ஆகியவற்றின் அனுசரணையுடன், சிறுவர் கழகங்களின் இணையம் தென்மராட்சியில் நான்கு தினங்கள் நடாத்தும் மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சியின் ஆரம்ப வைபவம் நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கனொக் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் பாதுகாப்பான நாள் எப்போது ஏற்படும் என்பதில் நாம் ஆவலாக உள்ளோம்.

மிதிவெடி, கண்ணிவெடிகளை அகற்றி மக்களின் பாதுகாப்பினை உடனடியாக உறுதி செய்வது சற்றுக் கடினமாயினும் இப்பணியை துரிதமாக மேற்கொள்ளவேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு.

இவ்வாறான அபாயங்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதில் உள்ளூர் சிறுவர் கழகங்கள் ஈடுபடுவதைப் பார்க்கும் போது எமக்கு மகிழ்சசியாகவும் சற்று ஆறுதலாகவும் உள்ளது.

நேரத்தை வீணே கழிக்காது பிரயோசனம் மிக்கதாக நல்ல ஈடுபாட்டோடு இந்தப் பணி இடம்பெறுகிறது.

கடந்த இரு கிழமைகளுக்கு முனபும் குடாநாட்டில் மிதிவெடி அபாயம் இருந்தது. இன்றும், இப்போதும் இருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் சிறுவர்கள், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த இக்கண்காட்சி வழிவகுக்கும் என்றார்.

யாழ். மாவட்ட சிறுவர் கழகங்களின் இணைப்பாளர் செல்வி எஸ். தர்மிலா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் சிறுவர் பாதுகாப்பு நிதிய கொழும்புக் கிளையைச் சேர்ந்த ரி.லக்ஷ்மன், தென்மராட்சிப் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் பி.செல்வரட்ணம், சாவகச்சேரி இந்துக் கலலூரி அதிபர் ஆர். கைலைநாதன, அறவழிப் போராட்டக்குழுவைச் சேர்ந்த எம்.கே.ஜீவகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த ரி.லக்ஷ்மன் அங்கு கருத்துரையாற்றுகையில்,

இவ்வாறான கண்காட்சிகள், மிதிவெடி குறித்த விழிப்புணர்வை ஊட்ட நல்ல உபாயங்களாக அமைகின்றன.

மிதிவெடிகள், கண்ணிவெடிகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்க சிறுவர் பாதுகாப்பு நிதியம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என்றார்.(உ-77)

### கடனடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரம்

(பருத்தித்துறை)

'சீடா' திட்டத்தின் கீழ் அம்பன் கமநலச் சேவை நிலையம் 10 விவசாயிகளுக்கு கடன் திட்டத்தின்கீழ் நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

மேலும் நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்த விவசாயிகளுக்கும் நீரிறைக்கும் இயந்திரஙகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை கமநலச் சேவை நிலையம் மேற்கொண்டுள்ளது.

(உ-52)

## அமைச்சரின் கொலையை

# நேரில் கண்ட பத்துப்பேரின் வாக்குமூலங்கள் பதிவு

(கொழும்பு)

தென்மாகாண சபை அமைச்சர் எம்.கே.ரஞ்சித்தின் கொலை தொடர்பாக பத்துப்பேரின் வாக்குமூலங்களை பொலிஸார் பதிவு செய்துள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் சம்பவத்தை நேரில் கண்டறிந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இக்கொலைச் சமபவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் நேற்றுக்காலை வரை இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

தென்மாகாண சபையின் நீர்ப்பாசன மீன்பிடி அமைச்சர் எம்.கே. ரஞ்சித் நேற்று முன்தினம் காலை கொழும்பு கோட்டையில் பொலிஸ் தலைமையகம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக கொல்லப்பட்டமை தெரிந்ததே.(உ-10)

# சர்வதேச அணுசக்தி அமைப்பின் கூட்டத் தொடர் கொழும்பில்

(கொழும்பு)

சர்வதேச அணுசக்தி அமைப்பின் 25 ஆவது கூட்டத் தொடர் நேற்றுக் காலை கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஆரம்பமானது.

ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பின்கீழ் ஆரம்பமான இக்கூட்டத்தில் அணுசக்தி அமைப்பின் ஆலோசனை குழுத் தலைவர் டாக்டர் டி.ஏ.நெர்சிங் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

17 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்ட இக்கூட்டத் தொடரில்,

தொழில்நுட்ப அபிவிருத்தி, அணு அறிவியல் மேம்பாடு ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

(தி)

### விசேட நிகழ்ச்சித் திட்டம்

(சுதுமலை)

எதிர்வரும் யூலை மாதம் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி வார நிகழ்வுகளில் வலி - தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து முன்பள்ளிகளிலும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளதாக வலி - தென்மேற்கு சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (உ-252)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை உயர் வகுப்பு மாணவ மன்றத்தின் ஒளியை நோக்கி சஞ்சிகை வெளியீட்டு ,விழாவிலே மன்றப் பொருளாளர் ஸ்ரீ. கவிதா உரையாற்றுவதையும் அதிபர் திருமதி எஸ். சுந்தரேசன் மற்றும் மாணவிகள் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- பரு. நிருபர்)

# கடற்படைப் படகுகளில் கண்காணிப்புக் குழுவின் கொடி

## பறக்கவிடுமாறு தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் இருக்கும் கடற்படைப் படகுகளில் கண்காணப்புக் குழுவின் கொடி பறக்கவிடப்பட வேண்டும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலகவுக்கு அவரால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இது வரைகாலமும் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள இருக்கும் கடற்படைப் படகுகள், பிரச்சினைக்குரிய பகுதிகளுக்குச் செல்லும் பொழுது மட்டுமே கண்காணிப்புக் குழுவின் கொடி பறக்கவிடப்படுவது வழமையாகும்.

இனிவரும் காலங்களில் கண்காணிப்புக் குழுவினர் பயணம் செய்யும் கடற்படைப் பகுதிகளில் எந்நேரமும் கொடிபறக்கவிடப்பட வேண்டும்.

கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்புக்கு இது மிகவும் அவசியமான தேவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமையவே தாம் இக்கோரிக்கையை விடுத்துள்ளதாகவும், கண்காணிப்புக் குழுவினர் இருக்கும் கடற்படைப் படகுகளில் இரவு நேரத்தில் கொடியை அடையாளம் காணும் வகையில் ஒளியூட்டப்பட வேண்டும் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(உ-8)




வடமராட்சி கிழக்கில் மீளக் குடியேறியோர்களின் நன்மை கருதி வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் நடாத்தப்பட்ட இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் விழாவில் வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் தலைமை தாங்கி உரையாற்றுவதையும் தியாக தீபம் திலீபன் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி செல்வி ஈழவாணி மூதாட்டி ஒருவருக்கு இலவச கண்ணாடியை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படம்:- பரு. நிருபர்)

## இராஜகோபுர அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்தில் பல இலட்சம் ரூபா செலவில் அமையவிருக்கும் இராஜ கோபுர அடிக்கல் நாட்டு விழா எதிா வரும் ஜுன் மாதம் முதலாம் ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்து சமயவிவகார அமைச்சா தி.மகேஸ்வரன் அடிக்கல்லை நாட்டிவைப்பார். (உ)

## கடன் அடிப்படையில் காணி

(கல்வயல்)

கொழும்புத்துறைப்பகுதியில் உள்ள காணி அற்ற 50 குடும்பங்களுக்கு குறைந்த விலையில் கடன் அடிப்படையில் காணி வழங்கும் நடவடிக்கையில் யாழ்ப்பாண பிரதேச செயலர் ஈடுபட்டுள்ளார்.

மேலும் யாழ். மாவட்டத்தில் காணி அற்றவர்களுக்கு அரசாங்க காணிகளையும், கோவில்க் காணிகளையும் வழங்குவதற்குரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. (உ-36)

# அரசியல் யாப்பில் சீர்திருத்தம் செய்து

# பரஸ்பர நல்லிணக்கத்துடன் அரசியல் தீர்வு

## இதுவே இன்றைக்கு அவசியமானது கலாநிதி பிரண்டன் ஓடியூபி கருத்து

(கொழும்பு)

தேசிய மட்டத்திலான சுயநிர்ணயம் பற்றிய சர்வதேச சட்டங்



களில் அண்மைக்காலத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையின் அரசியல் ரீதியான தீர்வு காணும் முயற்சிகள் பற்றிய அனைத்து நடவடிக்கைகளின் போதும் இவ்வாறான சட்டங்களின் தாக்கம் எவ்வாறு அமைகின்றது என்பது பற்றியும் பிரிட்டிஷ் - ஐரிஸ் பிரச்சினையுடன் எவ்வாறு இதனை தொடர்பு படுத்திப் பார்க்கலாம் என்பது பற்றியும் இங்கு ஆராய வேண்டும்.

அதேவேளை, இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை சிங்கள மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் வகையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய விருப்புக்களை முன்னெடுத்துச் செல்லும்படியான ஓர் ஆக்கபூர்வமான பொறிமுறை மூலம் அரசியல் யாப்பு ரீதியிலான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இருசாராரிற்கும் இடையில் பரஸ்பர நல்லிணக்கத்துடன் தீர்வினை முன்னெடுத்துச் செல்லப்படவேணடும் இதுவே இன்றைக்கு அவசியமானதும் கூட என்று தெரிவித்துள்ளார் கலாநிதி பிரண்டன் ஓடியூபி.

இலங்கை இனத்துவ கல்விக்கான சர்வதேச நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

ஒன்று பட்ட இலங்கையென்ற வரம்புக்குள் இருந்தவாறு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கின்றார்கள என்று கூறுபவர்கள் உண்மையில சுயநிர்ணயம் என்ற அற்புத அதிகாரங்கள் உலக நாடுகளின் கோட்பாட்டுப் பெட்டியில் தொடர்ந்தும் தேங்கியுள்ளது என்றதோர் போலிக்கருத்தை வைத்தே அவ்வாறு கூறுகிறார்கள்.

பனிப்போரின் முடிவைத் தொடர்ந்து வந்த காலத்தில் சுயநிர்யணம் பற்றிய சர்வதேச சட்டபு,ர்வ அதிகாரங்களை கட்டுப்படுத்தும் படியான அல்லது அவற்றுக்கு சவால் விடும்படியான அரசியல் முயற்சிகள் முன்வந்திருப்பதை அவதானிக்கலாம். இதன் பின்னணியில் இலங்கையின் அரசியல் செயற்பாடுகளும் மிக முக்கியம் பெறுகின்றன.

ஒருபக்கத்தில் பனிப்போர் காலத்தின் போது இருந்து வந்த சுயநிர்ணயம் பற்றிய கட்டுப்பாடுகள் திறந்த அமைப்பிலானதோர் உருப்படியான அரசியல் அங்கீகாரம் மூலம் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பாரபட்சம் காட்டப்படும் சிறுபான்மையினர் விடயத்தில் வெளியார் தலையிட்டு அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் சாத்தியக்கூறுகள் மாற்றம் பெற்றன.

அடுத்தபக்கம் சுயநிர்ணயம் பற்றிய பலமான கோட்பாடு அதிகாரப்பகிர்வு பற்றிய பிராந்திய சுயாட்சி அடிப்டையிலான உள்ளக சுயநிர்ணய அல்லது பிரிந்துசெல்ல முடியாத அமைப்பினை தொடர்ந்தும் பேணிவருகின்றது.

பனிப்போர் காலத்தின் பின்பு சர்வதேச சட்டங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் சுயநிர்ணயத்திற்கான அந்தஸ்தை விரிவுபடுத்தியுள்ளது.

பிரிவினைபோக்கற்ற சமஷ்டி முறையிலான சுயநிர்ணயம் மற்றும அதிகாரப் பரவலாக்கம், சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கான தனிநபர் மற்றும் கூட்டுப்பொறுப்பு என்பவற்றை வலியுறுத்தும் வகையில் சர்வதேச சட்டங்கள் அவ்வப போது மாற்றம் பெற்றுள்ளன.

அரசியல் அந்தஸ்துக்கான உரிமையை கொண்டிருப்போரும் சுதந்திர பொருளாதார முறை, சமூக கலாசார அபிவிருத்தி என்பவற்றை இறைமையுள்ள சுதந்திர நாடு என்ற வகையில் ஸ்தாபிக்கக் கூடியவர்களும் சுதநதிரமான மற்றொரு நாட்டுடன உறவுகளை கொண்டிருப்போரும் அல்லது சம்பந்தப்பட்ட மக்களால் சுயமாக தீர்மானிக்கக் கூடிய அரசியல் அந்தஸ்தை கொண்டிருப்போரும் சுயநிர்ணயத்தின உரிமையாளர் என்பது புதிய கோட்பாடாகும்.

இவ்வாறான உரிமை கோரல் விடுக்கப்படும் போது சர்வதேச சட்டங்களின் வழிகாட்டல் அற்றநிலையில் அரசாங்கங்கள் இவற்றோடு முரண்படுவது தவிர்க்க முடியாத விடயமாகின்றது.

2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒஸ்லோவில் விடுதலைப்புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசிற்கும் இடையிலான பேச்சுக்களின்போது ஈழம் சம்பந்தமான அறிவிப்பு பலரை ஆச்சரியத்திற்குள்ளாக்கியிருக்கலாம்.

ஐக்கிய இலங்கை என்றவரையறைக்குள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சமஷ்டி முறையிலான ஒரு தீர்வுக்கு இருதரப்பும் இணங்கியிருப்பதாக நோர்வே அனுசரணையாளர்கள் தெரிவித்திருந்தனர் என்று குறிப்பிட்டார். (உ-8)

# சிரான் கூட்டம் ஒத்திவைப்பு தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)

உடனடி மனிதாபிமான புனர்



வாழ்வு வேலைகளுக்கான உபகுழுவின் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கை சமாதான செயலணியின் செயலாளர் பேர்னாட் குணதிலகாவுக்கு விடுதலைப்புலிகளின் அரசியல்த் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நடந்து முடிந்த சிரான் கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என்பதை சுட்டிக்காட்டியும் பிரதமருக்கு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுமாறு சு.ப. தமிழ்ச்செல்வன் அக்கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக்கூட்டம் நேற்றுமுன்தினமும் நேற்றும் கிளிநொச்சியில் நடைபெறவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிரான்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக ஜப்பான், நோர்வே தூதுவர்களுக்கும் சு.ப.தமிழ்ச்செல்வன் அறிவித்துள்ளார். (வ)

# தென்னைப்பயிர்ச் செய்கைக்கு 10ஆயிரம் மில்லியன் நிதி

(கொழும்பு)

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தென்னைப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள அரசாங்கம் 10 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கி இருப்பதாக தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

1999ம் ஆண்டு முதல் 2002ஆம ஆண்டுவரை ஏற்பட்ட வரட்சி காரணமாக 7 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட பகுதியில் தென்னைகள் அழிவடைந்துள்ளன.

இதனை ஈடுசெய்யும் வகையில இன்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடக்குகிழக்கு யுத்தம காரணமாக மேலும் 20 ஆயிரம தென்னைகள் அழிந்துள்ளன என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# புலிகளின் முயற்சிக்கு இனவாதிகள் இடையூறு

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கச் சென்ற விடுதலைப்புலிகளை தடுத்த அரசியல்வாதிகள் சிலர் அப்பொருட்களை அபகரிக்க முயன்றுள்ளனர்.

இதன் பிரகாரம் கடந்த வியாழக்கிழமை கொழும்பிலிருந்து களுத்துறைக்கு 5 லொறி நிவாரணப் பொருட்களுடன் புலிகள் சென்ற போது தொடங்கொடை என்னும் பகுதியில் அங்குளள அரசியல்வாதிகள் சிலர் விடுதலைப்புலிகளை தடுத்து நிறுத்தி உள்ளே செல்ல முடியாது எனவும் கொண்டு வந்த பொருட்களை இவ்விடத்திலேயே வழங்கி விட்டுச் செல்லுமாறும் தடுத்துள்ளனர்.

ஆனால் தமிழீழ விடுதலைப புலிகளோ நேரடியாக கொண்டு சென்று பாதிக்கப்பட்டமக்களுக்கு நிவாரணத்தை வழங்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நின்றனர். பின்னர் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களுடன் அங்கு செல்ல அவ் அரசியல்வாதிகள் 'அனுமதித்தனர்.

இதேவேளை, அவ்விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் விடாப்பிடியாக நிற்காவிட்டால் அவர்கள் கொண்டு சென்ற நிவாரணப்பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியவாறு சென்றடைந்திருக்காது என்று குறிப்பிடப்படுகிறது. (உ-10)

# காப்புறுதிக் கொம்பனிகளின் எண்ணிக்கை உயர்வு

(கொழும்பு)

இலங்கை காப்புறுதித்துறை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக மத்தியவங்கி அறிவித்துள்ளது.

இதற்கமைய உள்நாட்டு காப்புறுதிக் கொம்பனிகளின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளதுடன், இக்கொம்பனிகளின் கிளைகள் 463 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் 2003 ஆம் ஆண்டு ஆண்டிறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காப்புறுதிக் கொம்பனிகளின் சொத்துப் பெறுமதி 42 மில்லியன்ரூபாவாக இருந்த போதிலும், கடந்த ஆண்டு இக் கொம்பனிகள் பெற்ற நிகர இலாபம் 1.4 பில்லியன ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம் மக்களுக்கு தனி நிர்வாகக் கட்டமைப்பு

## இதுபற்றிப் பேசவே நோர்வே சென்றாராம் ஹக்கீம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்குறித்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் கோரியுள்ள இடைக்கால நிர்வாக சபை அமைப்பில் முஸ்லிம்மக்களுக்கு இருக்கவேண்டிய அதிகாரங்கள் குறித்தும் பேசுவதற்காகவே தாம் நோர்வேக்கு விஜயம் மேற்கொணடுள்ளதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலை வருமான அமைச்சர் ரவு,ப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நோர்வே பயணமாகியுள்ள ஹக்கீம் அங்கிருந்து ஊடகங்களுக்கு கருத்துத தெரிவிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் ஹக்கீம், முஸ்லிம் மக்கள் பெரும்பானமையாக வாழும் கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றம், அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளை முஸ்லிம்களே மேற்கொள்ளும் வகையிலான அதிகாரங்கள் குறித்து நோர்வே அரசாங்கத்துடன் பேசவுள்ளேன்.

வடக்குகிழக்கு பகுதிகளில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபையில் முஸ்லிம்மக்களின் தனித்துவத்தை பேணும் வகையில் தனியான நிர்வாக கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

அப்போது தான் முஸ்லிம் மக்களின் தேவைகளையும், புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியும்.

நோர்வே, டென்மார் ஆகிய நாடுகளில் இலங்கையர்களுக்கு கப்பல்த்துறைமுகங்களில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ளுவது தொடர்பாக அந்நாடுகளின் கப்பல் துறைமுக அபிவிருத்தி அமைச்சுக்களுடன் பேசவுள்ளேன் என்று தெரிவித்துள்ளார். (தி)

### இரத்தினபுரி மாவட்டத்தில

# 70 சடலங்கள் இன்னமும் மீட்கப்படவில்லை

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளினால் உயிரிழந்தோரில் 70 பேரில் சடலங்கள் இன்னமும் மீட்கப்படவில்லை என மாவட்டச் செயலாளர் மாலினி பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

வெள்ள அனர்த்தங்களினால் இரத்தினபுரி மாவட்டத்தில் 128 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், மண்சரிவு அபாயங்களை எதிர்நோக்கியுள்ள பிரதேசங்களிலேயே மேற்படி 70 பேரின் சடலங்களும் புதையுண்டிருப்பதாக கருதப்படுகின்றது. (தி)

# மனித மூளையின் நடத்தைக்கோலங்களை அறிந்து நோய் அறிகுறிகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும்

(சென்றவாரத்தொடர்ச்சி)

நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை உறவாடல்,மனநிலை, பாரம்பரியம் மனப்பாங்கு,பழக்கவழக்கம் என்பவற்றில் இருந்து அறியலாம்.

பதகளிப்பு நிலை, உணர்ச்சி வசப்படும் நிலை,அட்டகாசமான நடத்தை,குரூர நடத்தை என அசாதாரண நடத்தை நிலைகள் மாறுபடும்.நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொள்ள அசாதாரண நிலையை அடையாளப்படுத்தல் வேண்டும்.உள்ள வளங்களை ஆராய்தல் வேண்டும். பாதக நிலைகளை அறிதல்,குடும்பத்தில் ஏற்பட்ட தாக்கத்தை அறிதல் வேண்டும்.எதிர்கொள்ளல் படிப்படியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.கால எல்லைகள் வகுக்கப்படல் வேண்டும்.வளங்களை ஊட்டல் வேண்டும் பாதக நிலைகளை அகற்றல்வேண்டும். குடும்பத்திற்கு உதவுதல் வேண்டும.

## பற்றுப் பிறழ்ச்சி

பற்றுப்பிறழ்ச்சி நிலையில் இரு நிலைகள் உண்டு.முதலாவது சோர்வு நிலை.இதன்போது சோர்ந்த சுபாவம்,செயல் குறைவு, சந்தோசமறற மன நிலை, பதகளிப்பு, கோபப்படல்,எரிச்சல்படல், குதூகலிப்பதில் ஆர்வம் இன்மை என்பன காணப்படும. மேலும் உற்சாகம் குன்றி இருப்பர். கிரகித்தல் குறைவு, எளிதில் ஞாபகப்படுத்த முடியாமை,எல்லாமே தீங்காக நடக்கிறது என்ற எண்ணம், தனக்கு நோய் ஏற்பட்டு விட்டதென்ற எண்ணம்,தன்னைத்தானே குற்றம் காணல்,அதிகாலையில் நித்திரைக்குழப்பம்,நிறை குறைதல், உணவில் நாட்டம் இன்மை, பாலியல் நாட்டமின்மை,மீளும் எண்ணங்கள்,தன் சுயத்தன்மையை இழத்தல் என்பன காணப்படும்

உணர்வு எழுச்சி நிலையில் சூழலுக்கு ஏற்ப உணர்வுகள் மாறுபடும். எரிச்சல் படல்,அதிக உற்சாகமாகச் செயற்படல்,மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகள், பொதுவாக ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகள், நித்திரையின்மை, உணவில் நாட்டம் அதிகம்,பாலியல் உணர்வு கூடல், கதைக்கும் வேகம்கூடல், எண்ணங்கள் மாறல் அல்லது மறத்தல்,விரிவான எண்ணங்கள்,பெரிய நிலை பற்றிய மாயப் புலனுணர்வு எண்ணங்கள் காணப்படும்.

அகப்பிறழ்ச்சி நிலையில் மாயப் புலனுணர்வுகளும்,எண்ணங்களில் மாற்றங்களும் ஏற்படும். உடலியக்க அசைவிலும் மாற்றம் ஏற்படலாம். விருத்தியில் ஏற்படும் தடைகள் புத்திக்கூர்மை விருத்தியில் தடையை ஏற்படுத்தி, கற்றலில் இடர்களை ஏற்படுத்தும். இதனால் மூளை விருத்திக் குறைபாடு உடையோர் ஒரு சில அன்றாட நடவடிக்கைகளை மட்டும்செய்யும் தகைமை உடையவராக இருப்பர்.

## அசாதாரண நடத்தைப் பிரிவுகள்

இறுதியாக அடிப்படை அசாதாரண நடத்தையினைப் பத்துத் தலைப்புகளில ஆராயலாம்.

* புலனுணர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள்.
* எண்ணங்களில் ஏற்படும் மாற்றங்கள்.
* பேச்சில் ஏற்படும் மாற்றங்கள்.
* ஞாபக சகதியில்ஏற்படும் மாறறங்கள்.
* விழிப்புணர்வில் ஏற்படும் மாற்றங்கள.
* உடலியக்க அசைவுகளில் ஏற்படும் மாற்றங்கள்.
* உணர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள்.
* தன் சுயத்தன்மையை உணர்வதில் ஏற்படும் மாற்றங்கள்.
* அசாதாரண சுபாவங்கள்.
* பாலியல் கோளாறுகள்.

## மருத்துவ விளக்கம்

புலனுணர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள்,புலன்களின் செறிவு, அளவு, உருவம் என்பன திரிவுபடுத்தப்படுவதால் உருவாகலாம். தவறான புலன் உணர்தன்மையினால் ஏற்படலாம். உதாரணமாக மாயத்தோற்றத்தில் கயிறு இருட்டில் பாம்பாகத்தெரியும். உதாரணமாக மாயப்புலனுணர்வில் புலன்கள் தூண்டப்படாதபோதும் புலனுணர்வு தெரியும். இது ஒலிப்புலனாக கேட்டலாக அமையலாம். பார்வைப்புலனாக காட்சிகளாக அமையலாம். மணத்தலாக அமையலாம். தொடுகையாக அமையலாம். புலனுணர்வுகளில் காலத்தின் உணர்வில் ஏற்படும் மாற்றம் அதாவது காலப் பிறழ்ச்சி பின்வரும் நிலைகளில் ஏற்படும். துன்பமான நிலையில் காலம் மெதுவாகச் செல்லும். இன்பமான நிலையில் காலம் விரைவாகச் செல்லும். பயங்கர அழிவுக்குப் பின் காலம் பின்னோக்கிச் செலலும் காலத்தின் உடைவு அதிகமாகச் செயற்படும் போது கடந்த காலம் மறைக்கப்பட்டு விடும்.

## எண்ணங்களில் ஏற்படும் மாற்றம்

எண்ணங்களில்ஏற்படும் மாற்றங்களாக எண்ணங்கள் உருவாகும் போது விரைவாகத் தோன்றல், மந்தமாகத் தோன்றல், எண்ணங்கள் மீள மீள வரல் என்பன அமைகின்றன.எண்ணங்களின் தொடர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களாக எண்ணங்கள் நிலைத்து நிற்றல்,தடைப்படல், ஒனறுடன் ஒன்று கலத்தல், ஒரு எண்ணம் மற்ற எண்ணத்துடன் இணைதல், மாறுபட்டுச் செல்லல்,ஒரு கணத்தில் பல எண்ணங்கள்வரல் என்பன அமைகின்றன.

எண்ணத்தின் நிலையில் ஏற்படும் மாற்றங்களாகத் திரும்பத்திரும்ப ஒரே எண்ணங்கள் வரல்,வேற்று எண்ணங்களின் தொடர்பு, எண்ணங்கள் அகற்றப்படல் என்பன அமைகின்றன.எண்ணத்தின் உள்ளடக்கத்தில் சாதாரண எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் இருக்கும். இதற்குப்பதில் அசாதாரணமாக போலி நம்பிக்கைகள் காணப்படலாம். இவை பின்வரும் அம்சங்களுடன் தொடர்பானதாக இருக்கலாம். அவையாவன எதிராக செயற்படுவதாகக் கருதல்,தங்களைக் குறிப்பதாகக் கருதல்,பெரிய நிலையில் இருப்பதாக எண்ணல்,குற்ற எண்ணம், பிரயோசனம் இல்லை என்ற எண்ணம், உடலில் நோய் என்ற எண்ணம், அளவுக்குமீறிய சூழலுக்கு ஒவ்வாத மத அனுட்டானம், பொறாமை, பாலியல் உணர்வு மற்றவர்களால் கட்டுப்படுத்தப்பட்ட உணர்வு, எண்ணத்தை ஆட்படுத்தல் என்பனவாகும்.எண்ணத்தின் உருவாக்கத்தில் ஏற்படும் குறைபாடுகளாக தொடர்ச்சியின்மை அதாவது எண்ணங்கள் மாற்றப்படல், கட்டமைப்பு இன்மை அதாவது ஆரம்பக்கட்டமைப்பு குலைதல்,உள்ளடக்கம் மாறல் அதாவது திடீர் திடீர் என எண்ணங்கள் மாறல் என்பன காணப்படும்.

பேச்சில் ஏற்படும் மாற்றங்களாக பேச்சுத் தழுதழுத்தல்,பேசமுடியாத நிலை,புதிய சொற்களைக் பேசுதல், சொறகலவைகளின் பிரயோகம் என்பன அமைகின்றது.

## ஞாபகம், உணர்வுகளின் மாற்றம்

ஞாபக சக்தியில் ஏற்படும் மாற்றங்களில்,

முதலாவது உடனடி ஞாபகம். சில வினாடிகளில் ஏற்படுவது.பார்வை, கேட்டல்,புலன் மூலம்.

இரண்டாவது குறுகிய கால ஞாபகம்.15-30 வினாடிகளுக்குள் ஏற்படுவது. 6-7 பொருட்களை ஞாபகப்படுத்தும்

மூன்றாவது நீண்டகால ஞாபகம்.பதித்தல்,சேமித்தல்,மீளெடுத்தல், மீள நினைவு படுத்தல், உறுதிப்படுத்தல் என்பவற்றில் தங்கியுள்ளது. மறதி தற்காலிகமாக நெருக்கீட்டால் ஏற்படும்.

நினைவுப்பிறழ்ச்சி நிலைகள் இருவகைப்படும்.முதலாவது தற்காலிக நினைவுப்பிறழ்ச்சி நிலை. இது உடனடியாக ஏற்படுவது. ஆபத்தானது. மீளக் குணப்படுத்தக்கூடியது.நேரம்,காலம்,இடம் கூறமுடியாத நிலை.நிரந்தர நினைவுப் பிறழ்ச்சி நிலை -வயது வந்தவர்களில் ஏற்படுவது. அன்றாட சம்பவங்களை முதலில் மறப்பர்.ஆரம்பகாலச் சம்பவங்களை இறுதியில் மறப்பர்.

உணர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள் அசாதாரண உணர்வெழுச்சிகளாகவோ, உணர்ச்சி வசப்பட்டு செய்யும் அசாதாரண நடவடிக்கைகளாகவோ, உணர்வுகளை அசாதாரணமாக வெளிக்காட்டுவதாகவோ, உணர்வுகளை நோய்த்தன்மையாக காட்டுவதாகவோ, உணர்வு களை அசாதாரணமாக வெளிப்படுத்தும் நோய்த்தன்மையாகவோ காணப்படலாம்.

தன் சுயத்தன்மையை உணர்வதில் ஏற்படும் மாற்றங்கள் தன்னை உணரல் குலைதல்,தனது கட்டமைப்பினை உணரல் குலைதல்,தனது தொடர்ச்சி குலைதல் ,தனது எல்லை குலைதல் என வேறுபடும்.

விழிப்புணர்வில் ஏற்படும் மாற்றங்கள் ஆழ் தூக்கம்,விழிப்பு,நனவிலி நிலை,சோம்பல்,மப்பு,மயக்கம் என வேறுபடும். உடலியக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள் இசைவாக்கபட்ட உடல் அசைவுகளாக வெளிக்காடடும் உடலியக்க மாற்றம், செயற்படும்உடலியக்கமாற்றம்,பலன் கருதிய உடலியக்க மாற்றம் என வேறுபடும்.

இசைவாக்கப்படாத உடலியக்க மாற்றங்கள் தன்னிச்சையானதாகவோ,அசாதாரண தூண்டப்பட்ட இயக்கமாகவோ இருக்கும். பேச்சில் ஏற்படும் மாற்றங்கள் செவிமடுத்தல்,பேசும் வேகம்,சில பாவனைகள், திரும்பத்திரும்ப செய்யும் இயக்கங்கள்,இறுதியாக கூறியதைக்கூறல், எதிரொலித்தல் என்பன அமைகின்றன.

## சுபாவம்

ஒருவரின் நிலையில் ஏற்படும் மாற்றங்கள் சாதாரணமாக நிற்றலாக,அசாதாரணமாக நிற்றலாக, சிலையாக நிற்றலாக மாறுபடும். சிலரில்ஏற்படும் அசாதாரண சிக்கல் நிறைந்த உடல் அசைவுகள் பலன் கருதியதாகவோ,பலன் கருதாததாகவோ அமையும்.

**டாக்டர் சி.யமுனாநந்தா**
தேசிய வைத்தியசாலை, கொழும்பு

ஒருவரில் காணப்படக்கூடிய சுபாவங்களாவன சந்தேகப்படும் சுபாவம்,எளிதில் இரக்கப்படும் சுபாவம்,தனிமையை விரும்பும் சுபாவம்,எளிதில் கோபப்படும் சுபாவம், குறித்த ஒழுக்கக்கட்டுப்பாடுடைய சுபாவம்,பிறரைக் கவரும் சுபாவம், மற்றவர்களில் தங்கியுள்ள சுபாவம், குரூரச் சுபாவம் என வேறுபடும்.

பாலியல் குறைபாடுகள் சாதாரண விலகலாக இருக்கலாம். கலாசார விலகலாக இருக்கலாம். தனிமனித விலகலாக இருக்கலாம். மிகைப் பாலியல் உந்தல்களாக இருக்கலாம். (முற்றும்)

## மின் விநியோகம் சீரில்லை

(மானிப்பாய்)

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் பாதிக்கப்பட்ட மின் விநியோகம் சீர் செய்யப்படாமை குறித்து சண்டிலிப்பாய் கல்வளை வீதிப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மினி சூறாவளியினால் மின் விநியோகம் பாதிக்கப்பட்டு இரு வாரங்களுக்கு மேலாகியும் இன்னும் சீர் செய்யப்படவில்லை. மின் கம்பங்கள் முறிந்தும்,மின்சாரக் கம்பிகள் அறுந்தும் மின்சாரம் தடைப்பட்டது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்த விதநடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. (உ-3,232)

## பன்னிருபொலிஸார் பாதுகாப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ்க்கட்சிகளின் அலுவலங்களில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்னர் அங்குள்ள அலுவலகங்களில் 4 பொலிஸார்பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வந்தனர். அண்மைககாலமாக இராணுவப் புலனாய்வு உறுப்பினர்கள்,தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் படுகொலை செய்யப்படுவது அதிகரிக்கப்படுவதை அடுத்தே மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளின் அலுவலகங்களில் 12 பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு-தும்பளை இலட்சுமணன் தோட்ட ஸ்ரீவீரமாகாளி அம்மன் - வடபத்திர காளியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 18ஆம்திகதி ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் ஜுன் மாதம்11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (உ-10)

# ஊழல் தடுப்பு நடவடிக்கையில் இராணுவ உயர் அதிகாரிகள்

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை ஊழல அற்ற முறையில் பிரித்து விநியோகிப்பதற்கு வசதியாக இராணுவ உயர் அதிகாரிகள் உதவி அரசாங்க அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். நிவாரணப் பொருட்களை வழங்குவதில் ஊழல்கள் மலிந்து விட்டதாக பல முறைப்பாடுகள் கிடைத்ததைத்தொடர்ந்து படைத் தலைவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

இதன்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லப்படுகையில் இராணுவப்பாதுகாப்புடனான வாகனத்தொடர் அணிகளில் எடுத்துச்செல்லப்படும்.

நிவாரணப்பொருட்களைப் பிரித்து வழங்கும் நடவடிக்கை உதவி அரசாங்க அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை,புனர்வாழ்வு நடவடிக்கைகள்,மின்சாரம்,குடிநீர் போன்றவற்றை மீளவழங்குதல்,மருத்துவச் சிகிச்சை வழங்குதல் போன்றவற்றை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

பாடசாலைகள்,கோவில்கள் ,தேவாலயங்கள் போன்றவற்றைப் பொறுப்பேற்று நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நிவார்ணப்பணிகளை ஒருங்கமைப்புச் செய்வதற்கென அலரி மாளிகையில முப்படைகளினும் பொலிஸ் திணைக்களத்தினதும் சிரேஷ்ட அதிகாரிகள் கொண்ட கட்டுப்பாட்டு நிலையம் ஒன்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

200 இந்திய மீட்புப்பணியாளர்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதில் சுழியோடிகள், மருத்துவர் குழுக்கள்,9படகுகள்,2 ஹெலிகள், அம்புலன்ஸ் வண்டிகள் என்பன அடங்குகின்றன. (உ-)

# மலையகம் சென்ற புலிகள் மக்களுடன் கலந்துரையாடல்கள்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்களை வழங்கி வரும் தமிழீழ விடுதலைப்புலிகள் மலையக மக்களுடன் உத்தியோக பூர்வ சந்திப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் பிரகாரம்,முதல் சந்திப்பு நேற்று முன்தினம் தலவாக்கொல்லை கதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் ,பெருமளவுமக்கள் சமூகமளித்திருந்ததுடன்,வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன்,வவுனியா மாவட்ட மேலதிக அரசியல்துறைப் பொறுப்பாளர் இராவணன்,கிளிநொச்சி நடுவகப் பணியகத்தைச் சேர்ந்த அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள்,

சிறுபான்மையினர் ஒரே சக்தியாக செயற்படும் காலம் தற்போது உருவாகியுள்ளது.

கடந்த காலங்களில் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் முரண்பாடுகள் அரசியல் பிரச்சினைகளாக வெளிக்காட்டப்படுகின்ற அதேசமயம் சிறுபான்மையின மக்களின் போராட்டங்கள் இனவாதமாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

தற்போது இந்த நிலை மாறி, சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டங்களை பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.அத்தகையதொரு நிலைமை ஏற்பட காரணம் எமது விடுதலைப் போராட்டமே.

எனவே,நாங்கள் எமது உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதற்கு சிறுபான்மையினராகிய மலையகத் தமிழ் மக்களும் தமது பூரண பங்களிப்பை வழங்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

இக்கோரிக்கைக்கு அங்கு கூடியிருந்த மக்கள் தமது ஆதரவினையும்,ஒத்துழைப்பினையும் வழங்குவதாக உறுதியளித்தனர்.

இதேவேளை,இந்நிகழ்விற்கு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான பீ.சந்திரசேகரன் தலைமை தாங்கினார். (உ-10)

# வெள்ளப் பாதிப்புக்கு ஜேர்மன் நிதி உதவி

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென ஜேர்மன் அரசாங்கம் நாலரைக்கோடி ரூபாபெறுமதியான பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஜேர்மன் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இப்பொருட்கள் சமூக நலன்புரி அமைச்சர் ரவீந்திர சமரசிங்காவிடம் கையளிக்கப்பட்டன.

நீரைச்சுத்திகரிக்கும் இயந்திரங்கள்,மருந்துப்பொருட்கள், மின் பிறப்பாக்கிகள்,நீர்இறைக்கும் இயந்திரம் என்பனவே ஜேர்மன் அரசினால் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வெளிநாடுகளும்,அமைப்புகளும் நிதி உதவிகளையும், நிவாரணப் பொருட்களையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

கெடா அ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடா அர் விழையும் உலகு.
– குறள்

# வலம்புரி

## சமாதானம் மலரும்

அரசியல் யாப்புகளுக்கு அப்பால் இடைக்கால நிர்வாக சபை வழங்கப்படுமாக இருந்தால் சமாதானப் பேச்சுக்களைத் தொடரவும், டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளவும் முடியுமென விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா சாதகமாகப் பரிசீலிப்பதாக வெளியாகும் செய்திகள் மனதிற்கு ஆறுதல் தருவதாக உள்ளது.

இருபது வருடகால யுத்தத்திற்குத் தீர்வுகாண முற்பட்ட அரசுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது ஓர் தடையாக இருக்க முடியாது. இலங்கை இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்களின் உரிமையோடு சம்மந்தப்பட்டது.

வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம், இதனை ஏற்றுக் கொள்வதன் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இதனை ஏற்றுக் கொள்வதில் தடைகளும், தடங்கல்களும் இருக்குமாயின் இனபபிரச்சினை நீண்டு செல்லுமே தவிர, அதற்கு முடிவு கட்டமுடியாது.

ஆனால், ஐக்கியதேசிய முன்னணி அரசைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட வேண்டும். அவ்வாறு அவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடும் பட்சத்தில் எந்த விடயம் குறித்தும் பேசுவதற்கு அரசு தயாராக உள்ளது. இப்படி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் பீரிஸின் கருத்து தொடர்பாக விளக்கம் கூறிய விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டு, அவர்களின் மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தப்படுமாக இருந்தால் தமிழீழக் கோரிக்கை பற்றி பரிசீலிப்பதற்கு புலிகள் தயாராக இருப்பதாக தெரிவித்தார், இதன் அடிப்படையிலேயே சமாதானப்பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமாயின் நாடு பிளவு படுவதே ஒரேவழி என்ற முடிவில் இருந்து விலகி, ஒற்றை ஆட்சியை ஏற்பதற்கு விடுதலைப் புலிகள் முன் வந்திருக்கும் போது இடைக்கால நிர்வாக சபையை வழங்கி சமாதான முயற்சியை முன்னெடுக்க அரசு தவறுமானால், சமாதானத்தை ஏற்படுத்துவதற்குக் கிடைத்த பெரும் சந்தர்ப்பத்தை நழுவ விடுவதாகவே இருக்கும். இடைக்கால் நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தால் அது தனி நாட்டுக்கு வழிவகுக்கும் என பேரினவாதிகள் கூச்சலிடுவார்கள் ஆயின் சர்வதேசத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றே கூற வேண்டும்.

அரசு-விடுதலைப்புலிகளுக்கிடையில் சர்வதேச மத்தியஸ்தராக நோர்வே செயற்படும் போது, இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பதில் எந்தத் தவறும் ஏற்பட நியாயமில்லை என்பதால் அரசு துணிந்து செயற்பட முடியும்.

# படையினர் வடக்கில் நிலை கொள்வதன் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேண முடியாது

## ரூபவாஹினி கூ.தா. முன்னாள் தலைவர் வசந்தராஜா

(கொழும்பு)

தற்போதைய அரசினால் விடுதலைப்புலிகளின் மனதைக் கவர்ந்து கொள்ள முடிந்துள்ளது. மேற்கொள்ளப்படுகின்ற சமாதான நடவடிக்கையின் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைப்பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மேற்கத்திய நாடுகளை மூன்றாம் தரப்பாக பிரதிநிதித்துவப்படுத்துவது மிகவும் பெறுமதி வாய்ந்ததாக இருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சமாதான நடவடிக்கைகளுக்கு பகிரங்க ஆதரவு வழங்கி வருபவரும் ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவருமான வசந்தராஜா தற்போது லண்டனில் தங்கியுள்ள இவர் இது பற்றி மேலும் கூறுகையில்;

விடுதலைப்புலிகள் சமாதானத்துக்கு இணங்கி வந்தமை மிகவும் சிறந்ததும் காலத்துக்கு உகந்த புத்திசாலித்தனமானதோர் நடவடிக்கையாகும்.

நான் 1995ஆம் ஆண்டு ரூபவாஹினியை விட்டு விலகிய பின்னும் சமாதானப் பேச்சை வலியுறுத்தினேன். அப்போது 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் இருந்திருக்குமானால் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்திராது. தமிழீழவிடுதலைப்புலிகள்தான் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் என்றும் அதனால் அரசு அரசியல் தீர்வுகாண பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தான் என்றும் நான் அப்போது கூறினேன்.

### 3ஆம் தரப்பு மத்தியஸ்தம்

அதேபோல் பேச்சு வார்த்தையை 3ஆம் தரப்பின் மத்தியஸ்தத்துடன்தான் ஆரம்பிக்க வேண்டும் என்றும் கூறினேன். அன்று கூறியது இன்று நடந்து கொண்டிருக்கிறது. அன்று நான் கூறிய அந்தக்கருத்துக்களால்தான் என்னைச் சிலுவையில் அறைந்து ஆணி அடிக்க முயன்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தையிலிருந்து தற்போது விலகியிருப்பினும் மீண்டும் யுத்தத்திற்குச் செல்ல மாட்டார்கள். எனினும் அவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசுக்கு அழுத்தம் கொடுப்பார்கள்.

சிங்கள இராணுவத்தை ஆயுதத்தோடு வடக்குக்கு அனுப்புவதன் மூலம் இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பேண முடியாது என்பதை சிங்கள மக்கள் உணர வேண்டும்.

அத்துடன் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுக்குப்பின் ஏற்படுகின்ற பொருளாதார அபிவிருத்தியில் தென்பகுதியும் முன்னேற்றமடையும, அவ்வாறு தென்பகுதியல் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்போது அது வடக்குப்பகுதியின் முன்னேற்றத்திற்கும் ஏதுவாகும் என்பதால் நாம் ஒற்றுமையாக இருப்பதே நன்மை என எல்லோரும் புரிந்து கொள்வார்கள்.

### நம்பிக்கையுடன் செயற்படும் புலிகள்

அந்த வகையில் தமிழீழ விடுதலைப்புலிகளும் மிகவும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் செயற்பட்டு வருகின்றனர். அதன் பிரகாரம் பொருளாதார ரீதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க அரசு அர்ப்பணிப்புடன் உளளதால் பேச்சு வார்த்தை மூலம் ஏதாவது ஒரு நல்ல தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. இந்நிலையில், அரசு மீண்டும் யுத்தத்திற்கு செல்லுமானால் சர்வதேசத்தின் மத்தியில் சேலை உரிந்து விட்டுத்தான் செல்ல வேண்டும்.

இத்தகைய நிலையில் வாஷிங்டனில் இடம் பெற்ற நிதி வழங்கும் மாநாட்டின் முன்னோடிக் கூட்டத்தை நடத்திய அமெரிக்க அரசு விடுதலைப் புலிகளை அதற்கு அழைக்காது இருந்தமை அவர்களுக்கும் பெருமஏமாற்றத்தையும் கவலையையும அளித்துள்ளது.

### அமெரிக்காவின் காரணம் அர்த்தமற்றது

பயங்கரவாதி என புலிகளைத் தடை செய்திருப்பதால்தான் அக்கூட்டத்தில் புலிகளை கலந்து கொள்ள வைக்க முடியாதிருப்பதாக அமெரிக்க கூறுகிறது. அப்படியானால் அக்கூட்டத்தை வேறு ஓர் இடத்தில் நடத்தியிருக்கலாம்.

அத்துடன் எங்களது இனப்பிரச்சினைக்கு அடிப்படையாக விளங்குவது சம உரிமை தொடர்பிலான விவகாரம் என்பதை அமெரிக்கா புரிந்திருக்க வேண்டும். ஆனால் அமெரிக்காவே இதன் ஊடாக தேவையற்ற சந்தேகங்களை கிளப்புகிறது.

இச் செயல் சமாதான நடவடிக்கைக்கு உகந்தது அல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். (உ-10,8)

## ஒரு தசாப்த காலத்தில் 1230 யானைகள் இறப்பு

(கொழும்பு)

கடந்த 10 வருட காலப் பகுதியில் ஆயிரத்து 230 யானைகள் உயிரிழந்திருப்பதாக வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வன விலங்குத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில், யானைகளின் பிறப்பு வருடம்ஒன்றிற்கு 4சத வீதமாக இருக்கையில் இறப்பு வீதம் 6 ஆக உள்ளது.

இலங்கை காடுகளில் தற்சமயம் 3ஆயிரம் யானைகளே வாழ்ந்து வருகின்றன. இவற்றுள் 200 யானைகள் விகாரையிலும் வீடுகளிலும் வளர்க்கப்படுகின்றன.

யானைகளின் இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வன விலங்கு பாதுகாப்பு அதிகாரிகளும் பொது மக்களும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (தி)

# தென்மராட்சியில் அகழப்படும் மணல் வேறெங்கும் கொண்டு செல்ல முடியாது

## சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(கல்வயல்)

தென்மராட்சியில் அகழ்ந்தெடுக்கப்படும் மணல் அந்தப் பிரதேசத்தின் கட்டுமானப் பணிகளுக்கே பயன்படுத்தப்படவேண்டும் என தென்மராட்சி சூழல் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் தென் மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், கச்சாய், வரணி, நாவற்குழி, கோகிலாக்கண்டி பிரதேசக் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் வருவாய்த்துறையினர், பொலிஸ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த கால யுத்தத்தினால் தென்மராட்சிப் பகுதியின் பல்வேறு இடங்களிலும் வீடுகள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் என்பன பலத்த சேதமடைந்தும், முற்றாக அழிந்தும் உள்ளன. இவற்றைப் புனரமைக்கவென போதிய மணல் வளம் இல்லாத நிலையில் தென்மராட்சியில் இருந்து ஏனைய இடங்களுக்கு மணலை அகழ்ந்து செல்வதனை தடுக்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்படி இப்பகுதியில் இருந்து ஏனைய இடங்களுக்கு மணல் எடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் எடுக்கப் பட்ட ஏனைய முக்கியமான தீர்மானங்களாவன,

- ✪ நபரொருவர் ஒரு நாளைக்கு 5 லோட் மணல் மாத்திரமே ஏற்ற முடியும்.
- ✪ மணல் விநியோகம் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் இடம் பெறும்.
- ✪ மணல் விநியோகத்திற்கான கண்காணிப்பாளராக கிராம அலுவலர்களும், அரசியல் பிரமுகர்களும், பொலிஸாரும் செயற்படுவர்.
- ✪ வரணிப் பகுதியில் சூழல் பாதுகாப்புக் குழுவினால் பொது இடத்தில் மணல் பறிக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகிக் கப்படும்.
- ✪ கச்சாய்ப் பகுதியில் ஏற்கனவே அளவுக்கதிகமாக மணல் அகழப் பட்டதால் கடல் நீர் கிராமத்துக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் பெரும் எண்ணிக்கையான பனை, தென்னை மரங்களும் தறிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மண் விற்பனையினால் பெருமளவு மரங்களும் வேரோடு சாய்ந்துள்ளன. எனவே அங்கு மண்வளம் அழிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் மணல் அகழ்வதை தடை செய்வது தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்
- ✪ நாவற்குழி, கோகிலாக்கண்டிப் பகுதியில் சூழல் பாதுகாப்புக் குழுவின் சிபாரிசுடன் மணல் ஏற்றும் இடத்திற்குச் சென்று மணல் ஏற்ற முடியும் போன்ற தீர்மானங்கள் எடுக் கப்பட்டன. (உ-36)

## ஷெல் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வெடிக்காத நிலையில் கிடந்த ஷெல் ஒன்று படையினரால் கண்டெடுக்கப்பட்டு நேற்று வெடிக்க வைக்கப்பட்டது.

நெல்லியடிக்கும் மாலு சந்திக்கும் இடையில் விவசாயக் காணி ஒன்றுக்குள் காணப்பட்ட ஷெல்லே படையினரால் மீட்கப்பட்டு நேற்று மாலை 6மணியளவில் மீட்கப்பட்ட இடத்தில் வைத்தே வெடிக்க வைக் கப்பட்டது (த)

# ரயில்வே திணைக்கள ஊழியர்கள் பொது வேலை நிறுத்தம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தின் பல தரப்பட்ட தொழில்நுட்பப் பிரிவுகளைச் சேர்ந்த தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் சம்பள உயர்வு கோரி அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இதனால் கொழும்பு - சிலாபம், மாத்தறை-அனுராதபுரம் ஆகிய வற்றுக்கான ரயில் சேவைகளில் தடங்கல்களும், இடைநிறுத்தமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, ரயில்வேத் திணைக்களத்தில் கடமையாற்றிவரும் பாதைப் பராமரிப்பாளர், சமிக்ஞையாளர்கள் ஆகியோருக்கான சம்பளத்தை உயர்த்துவது தொடர்பான ஆலோசனைகள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப் பட்டிருப்பதாக ரயில்வே பொது முகாமையாளர் பிரியா டிசில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த கடமைகளில் ஈடுபடும் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் போக்குவரத்து அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே, சம்பள உயர்வு தொடர்பான ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், இவ்ஆலோசனையை போக்குவரத்து அமைச்சர் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## திைசரி தியானம்

## யார் அறிவாளிகள்?

மனைவி ,மக்கள் ,சுற்றத்தார், நண்பர்கள் இவர்களிடம் கொண்டிருக்கும் தொடர்பு பயணிகளுடன் அல்லது பயணம் செய்பவர்களுடன் நேரும் சந்திப்புப்போன்றது.

உறக்கத்தில் வரும் கனவு போல அவர்கள் ஒவ்வொருவரும் இறப்பின் மூலம் பிரிகிறார்கள். தூங்கி எழுந்ததும் கனவில் வந்தவைகளை மறந்து விடுவதுபோல இவர்களிடமிருந்து எந்த நேரத்திலும் விலகத்தயாராக இருக்க வேண்டும். எவரொருவர் இவ்வாறு பற்றின்றி சிந்தித்துச் செயல்படுகிறாரோ, அவரே அறிவாளி ஆவார்.

சுவாமி சிவானந்தர்

# ஜனாதிபதி மீது கொலைமுயற்சி ஊடகச் செய்தி குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை படுகொலை செய்வதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அங்கத்தவர் ஒருவர் முயற்சி மேற்கொண்டதாக பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கைகள் அனைத்தும் தற்போது சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர், குறிப்பிட்ட பத்திரிகையின் நிர்வாக முகாமையாளர் உட்பட அங்கு பணியாற்றிய ஊழியர்கள் பலரை விசாரணைக்கு உட்படுத்தி இருந்தனர்.

இப்பத்திரிகை செய்தி தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## மோ. சைக்கிளில் பின்னால் இருப்பவரும் தலைக்கவசம் அணிவது அவசியம்

### யாழ். பொலிஸ் அத்தியட்சகர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்யும் பின்னால் இருப்பவரும் தலைக்கவசம் அணிய வேண்டுமென்று யாழ்.போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்பவருடன் பின்னால் இருந்து பிரயாணம் செய்பவர் தலைக்கவசம் அணிவதில்லை இதனால் விபத்து ஏற்படும் போது உயிராபத்து ஏற்படக் கூடிய சாத்தியம் உள்ளது.இதனால் அதனைத் தடுக்கும் நோக்குடனேயே பின்னால் இருப்பவர் தலைக்கவசம் அணிவதைக் கட்டாயப்படுத்துவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளிற்கான உரிய ஆவணங்கள் வைத்திருப்பதுடன் இலக்கத்தகடுகள தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் போது இரண்டிற்கு மேற்பட்டோரை ஏற்றிச்சென்றால் அவர்கள் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சேனாரத்தின மேலும் கூறினார். (இ-5-7)

## மீனவர்கள் கரை திரும்பவில்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக்கடலில் கடந்த 24ந் திகதி மீன்பிடிக்கச் சென்ற இருவர் நேற்று வரை கரைதிரும்பவில்லை என வடமாகாண மீனவர் கூட்டுறவுச் சமாசத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த இ.ஜெயச்சந்திரன் (வயது-28) ந.சிவஜெகநாதன் (வயது26)ஆகிய இருவருமே கரைதிரும்பவில்லையென்று முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-52-5)

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையால் வளர்ப்பு நாய்களிற்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகி நாளை மறுதினம் வரை யாழ்நகரின் பல்வேறு இடங்களில் நடைபெற உள்ளதாக யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்துள்ளார். நாய்களிற்கு தடுப்பூசி ஏற்றுதல் பின்வரும் இடங்களில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரை நல்லூர் கொண்டலடி சனசமூகநிலையத்திலும், நாளை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை நாவலர் வீதியில் உள்ள மிருகவைத்திய நிலையத்திலும், பிற்பகல் 2.00 மணி முதல் 4.30 மணிவரை யாழ் ஓ.எல்.ஆர் பாடசாலை முன்பாகவும், எதிர்வரும் 29ம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை வண்ணார்பண்ணை வேம்படி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2மணி முதல் 4.30 மணிவரை திருநெல்வேலி பாலர் பாடசாலையிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (இ-5)

## இலங்கை வங்கி காரியாலயம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் வடமாகாணக் காரியாலயம் நாளை புதன் கிழமை யாழ்.நகரில் திறந்து வைக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையார் க.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இக்காரியாலயத்தினை வங்கிப் பொதுமுகாமையாளர் எஸ்.என்.பளிஹேன மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் பி.எ.சி பர்னாந்து ஆகியோர் நாளை காலை 9.30 மணக்கு திறந்து வைக்கவுள்ளனர்.

இதேவேளை இதுவரை காலமும கொழும்பில் இயங்கி வந்த இலங்கை வங்கியின் வடமாகாணக் காரியாலயம் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தை,பல்கலைக்கழக வளாகம், பனிக்கர் வளவுப் பகுதி ஆகிய இடங்களில் நாளை புதன்கிழமை கட்டாக்காலி நாய்கள் பிடித்தழிக்கப்படவுள்ளன.

எனவே வளர்ப்பு நாய்களைச் கட்டி வைக்குமாறும் வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகட்டினை நல்லூர் உபஅலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச சபை செயலாளர் எஸ்செலவரட்ணம் கேட்டுள்ளார். (இ-5)

---

**இடைக்கால சபைக்கு..**

தமிழீழத்தை வழங்குவதாகவே இருக்கும் இதனாலேயே சிஹல உறுமய அதனை எதிர்க்கிறது.

ஒன்று பட்ட இலங்கைக்குள் நாட்டை அபிவிருத்தி செய்து கட்டியெழுப்புவதற்கு சட்டபூர்வமான அரசாங்கம் ஒன்றினாலேயே முடியும்.இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு என்று திலக்கருணாரட்ணா சுட்டிக்காட்டியுள்ளார். (வ)


உங்கள்

வலம்புரியின்

சங்குநாதம்

* இழுபறியில் சிக்கிய இடைக்கால நிர்வாகம்.
* கலைஞரின் மகன் கைது.
* இயற்கை செய்த பேரழிவு.
* வியாசரின் பதில்.
* ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
* ஆலடி மாநாடு (நகைச்சுவையுடன் கூடிய அதிரடி)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை 14/-


### தென்மாகாண சபை அமைச்சர்

## கொலைச் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

தென்மாகாண சபையின் மீன்பிடி நீர்ப்பாசன விவசாயத்துறை அமைச்சர் எம்.கே. ரஞ்சித்தின் படுகொலை சந்தேக நபர்களை அடையாளம் கண்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் விசேட பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இக்கொலையை பாதாள உலகக் கோஷ்டியினரே செய்திருப்பதாகவும் கொழும்பின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இக்கொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளதால் பொலிஸார் தீவிர கவனத்துடன் செயற்பட்டு வருகின்றனர் எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்கொலைச் சம்பவம் குறித்து பொலிஸ் திணைக்களத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்றும் நடை பெற்றது. - (தி)

### வவுனியா மாவட்ட அபிவிருத்திக்கு

## ஆசிய அபிவிருத்தி வங்கி 244 மில்லியன் ரூபா வழங்கியுள்ளது

(வவுனியா)

வவுனியாவின் அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் 244 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்றுவரும் புனரமைப்பு வேலைகளை துரிதமாக மேற்கொள்வதற்காகவே இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.இந்நிதி 54 திட்டங்களிற்கு பயன்படுத்தப்படவுள்ளதாகவும் இத திட்டங்கள் அங்குள்ள மக்களின் வாழ்க்கைக்குத் தேவையாக அமையுமெனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைப் பிரதிநிதி ஜோன் ஆகுனி தெரிவித்துள்ளார்.

இந் நிதியில் 3.7மில்லியன் ரூபா செலவில் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-5)

### மட்டக்களப்பு மாவட்டத்தில

## படையினர் நிலைகொண்டுள்ள வீடுகளின் விபரம் சேகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் மற்றும் பொலிசார் நிலைகொண்டுள்ள பொதுமக்களின் வீடுகளின் விபரங்களைத் திரட்டும் பணி எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாக இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் தலைமையில் இடம்பெறும் இப்பணியில் தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகள் இடம்பெறவுள்ளனர்.

எதிர்வரும் 29ம் திகதி நடைபெறவுள்ள மட்டக்களப்பு மாவட்ட உபகுழுக் கூட்டத்திற்கு முன்னேற்பாடாக நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் இ.மோனகுருசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு ஏறாவூரில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்மக்களின் வீடுகளில் படையினரும் பொலிசாரும் நிலைகொண்டுள்ளனர். எதிர்வரும் சனிக்கிழமை இராணுவம் நிலைகொண்டுள்ள வீடுகள் தொடர்பாகவும், எதிர்வரும் திங்கட்கிழமை பொலிசார் நிலைகொண்டுள்ள வீடுகள தொடர்பாகவும் விபரங்கள் திரட்டப்படவுள்ளன. (த)

## விமான நிலையத்தில் ஸ்கானிங் சாதனம்

(கொழும்பு)

சார்ஸ் நோயாளிகளை இனங்கண்டு கொள்வதற்காக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தில் அதிக சக்திவாய்ந்த ஸ்கானிங் சாதனமொன்று நேற்றுமுதல் பொருத்தப்பட்டுள்ளது.

7.5. மில்லியன் ரூபா பெறுமதியான இந்த உபகரணம் சார்ஸ் நோய் பரவுவதை தடுப்பதற்கு பெரிதும் உதவுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 8ம் ஆண்டு எழுச்சி நிகழ்வுகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தரவைக்குளம் இராணுவ முகாம் தாக்கியழிக்கப் பட்டதன் 8ம் ஆண்டு நிறைவு நாள் எழுச்சி நிகழ்வுகள் இன்று நடைபெற உள்ளது.

கடந்த 20ம் திகதி ஆரமபமான இந் நினைவு நாள் எழுச்சி நிகழ்வுகளில் கலை நிகழ்வுகள் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விடுதலைப்புலிகளின் விசேட படையணிகளின் அணிவகுப்பு என்பன இடம்பெற்றுள்ளன.

இதேவேளை இன்றைய நிகழ்வில விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை விசேட தளபதி கேணல் கருணா அம்மான் உரை நிகழ்த்தவுள்ளார். (இ-5)

---

**இடைக்கால நிர்வாகத்தை..**

கையாள்வதற்கு அரசியல் அமைப்புக்குப் புறம்பான வகையில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றினை அரசு ஏற்படுத்தித் தரவேண்டும்.இல்லையேல் அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டோம் என்று விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நோர்வேயும் யப்பானும் விடுதலைப் புலிகளை வலியுறுத்தி வருகின்றன.

அரசியல் அமைப்புக்குப் புறம்பான முறையில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றினை விடுதலைப் புலிகளுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளின் மத்தியில் அரசியல் அமைப்பிற்குட்பட்டவகையில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பதற்கு அரசு தயாராக இருப்பதை எரிக்சோல் ஹெய்ம் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### அமெ. ஏ.பி.சி

## மன்னிப்புக் கோரியது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கொடியை இலங்கை அரசின் கொடியாக ஒளிபரப்புச் செய்தமைக்கு அமெரிக்காவின் ஏ.பி.சி தொலைக்காட்சி மன்னிப்புக் கேட்டுள்ளது.

தென்னிலங்கையில் இடம் பெற்ற ஏ.பி.சி தொலைக்காட்சீ நிறுவனம் அதில் விடுதலைப்புலிகளின் கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக ஒளிபரப்புச் செய்திருந்தது. இச்சம்பவம் கடந்த 18-ம் திகதி இடம் பெற்றது.

இதுதொடர்பாக வாஷிங்டனிலில் உள்ள இலங்கைத்தூதரகத்தை சேர்ந்த றபின்த ஆரியசிங்கா கருத்துத்தெரிவிக்கையில் இச்சம்பவம் தொடர்பாக தொலைக்காட்சியின் செய்தித் தயாரிப்பாளரிடம் விளக்கம் கோரயபோது அது செய்திப் பிரிவில் ஏற்பட்ட தவறு காரணமாக நிகழ்ந்ததெனவும் அதற்காக தாம் மன்னிப்புக் கோருவதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

## காவலாளி தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் இரவுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளி ஒருவர் இனந்தெரியாத இருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த எஸ்.மகேஸ்வரன் (வயது50) என்பரே தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மது போதையில் வந்த இருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் பின்னர் தலையில் போத்தலால் தாக்கியதாகவும் காவலாளி தெரிவித்துள்ளார்.இதேவேளை அவருடைய கைக்கடிகாரத்தையும், இரவு உணவையும் தாக்கியோர் எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## அமைச்சர் மகேஸ்வரன் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் இன்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் ந[illegible] பெறவுள்ள இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் கோரிய[illegible]ள இடைக்கால நிர்வாக ச[illegible] ஆதரவு அளிக்குமாறும் கள[illegible]றையில் உள்ள தமிழ் அரசி[illegible] கைதிகளிற்கு பொதுமன்னிப்பு வ[illegible]குமாறும் அமைச்சர் மகேஸ்வர[illegible] கோரவுள்ளார். (வ)

---

**இடைக்கால...**

இறுதி முடிவு எட்டப்படவில்லை இதற்கு இறுதி முடிவு வருகின்ற காலத்தில்தான் ஆயுதங்கள் களைவதைப் பற்றி நிதானமாக பேச முடியும் என்றும் சம்பந்தன் மேலும் கூறினார். (இ)


இலங்கை வங்கி அறிவித்தல்

இதுவரை காலமும் கொழும்பில் இயங்கிவந்த இலங்கை வங்கியின்

வட மாகாணக் காரியாலயம்

வாடிக்கையாளர் சேவைகளைத் துரிதப்படுத்தும் மற்றும் விரிவாக்கும் நோக்கில் நாளை (28.05.2003) புதன்கிழமை முதல் யாழ்நகரிலேயே இயங்கும் என மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.

இக்காரியாலயத்தை எமது பொது முகாமையாளர் திரு.எஸ்.என்.பளிஹேன அவர்கள் சம்பிரதாய பூர்வமாக அத்தினத்தில் காலை 9.30 மணிக்குத் திறந்துவைப்பார்கள்.

இந் நிகழ்வில் கிளைகளுக்கும் அபிவிருத்தி வங்கியியலுக்கும் பொறுப்பான பிரதிப் பொதுமுகாமையாளர் திரு.B.A.C. பெர்னாண்டோ அவர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

தேசத்தின் வங்கியாளர்

இலங்கை வங்கி

உதவிப்பொது முகாமையாளர் (வடமாகாணம்) யாழ்ப்பாணம்.

(C/6224)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்ட